[illegible]

V3. No. 17 29 April 1930.

൧

3L
ണ211, N28KN
N30.3.17
189101

1151

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

7 MAY 1930

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3.] 1930 ௵ ஏப்ரல் ௴ 24௳ [No. 17.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 321
2. அப்பர் (யுத்தக்கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 323
3. குறுந்தொகை (பாட்டு 32—40)
K. இராமரத்நம் ஐயர் B. A. 325
4. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 327
5. நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—3 பதிகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 330
6. இலஞ்சிப் பாவை (சிறைப்பட்ட சிற்றிடையாள்)
T. S. நடராஜபிள்ளை, B A., B.L 331
7. ஆச்சரிய சூடாமணி (அசோகவன அங்கம்)
R. முத்தையர் 333
8. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 334
9. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 337

கலாநிலயம்

189101

ஒக்க நினைப்பா ருறவு.

தற்கால நாகரிகத்தின் வெம்மையால் தவிக்கின்ற சிறுமைகளையெல்லாம் சாமர்த்தியமென்று மதி மயங்கிக் கும்பலொடுகலந்து கூவுவார் மொழிகளை இத்தலையங்கங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறு வகைகளில் ஆராய்ந்து ஆராய்ந்து, பிச்சைக்காரன் சட்டைப் பையை உள்ளும்புறமுமாய்ப் புரட்டிப் பார்த்தாலும் அதனுள் ஒன்றுங் கிடைக்காததுபோல், இம்மொழிகளுள்ளும் பொருளொன்று மமையாமையை நாம் காட்டிவந்துளோம். "புதிய தொன்றையும் இதனாற் 'கலாநிலயம்' புகலவில்லையே; தற்கால நாகரிகம் ஆன்மவுணர்ச்சியற்ற லோகாயதப் போக்குடையதென்பதைப் பலர் பேசவுங் கேட்டிருக்கின்றோம், யாமும் அறிவோம்" என்று நினைப்பவர்க்கு நாம் உரைக்க வேண்டியதொன்று உளது. தற்கால நாகரிகத்தைப் பழித்துப் பேசுகின்றவர்களிற் பெரும் பகுதியோர், அதனைப் பின்பற்றிப் போற்றுவோரைக் காட்டிலும், அதிகமும் தெருண்டசிந்தையர்களாய்த் தோன்றவில்லை. கவி இரவீந்திரநாதர் போன்ற மெய்யறிவுடையார் சிலர் தற்கால நாகரிகத்தின் புன்மையைப்பற்றி வரைந்துள நூல்களைக் கண்ணாளவில் பார்த்ததும், அன்னார் அவ்வாறு வரைந்திருக்கின்றனரென்பதைக் காதளவு கேட்டிருப்பது மல்லாமல் வேறெவ்விதப் பயிற்சியும் முயற்சியு மின்றியே தம் வாய்வந்த அளவு இந்த லோகாயத நாகரிகத்தை வைதுகொண்டிருப்பர்பற்பலர். இதுவும் இக்காலமரபுகளில் (Fashion) ஒன்றே அன்றி வேறு யாவது ஆகக் கூடும். முன் "சொற்றொட ராரவாரம்" என்ற தலைப்பின்கீழ் எழுதிய தலையங்கங்களில் (2, வால்யூம், 421, 441, 461 வது பக்கங்கள்), உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் வஞ்சகர் கிடக்க, உள்ளொன்றும் வைக்காமல் புறத்தே மிகமிகப் பேசுவோர்களது இலக்கணம் இயம்பப்பெற்றிருப்பதை இங்கு **நினைவிற்** கொண்டக்கால், இந்நாகரிகப் பழிப்பாளர்களுள் ஒருபெரும் பகுதியோரை அப் பின்னவரினத்தில் சேர்த்து மதிக்கவேவேண்டி நேரிடும். உள்ளத்தினால் உணர்ந்த உண்மையை உரைக்கின்றனரோ, அல்லது வாயில்வந்தன சாற்றுகின்றனரோ என்று தேர்வதற்கு அவர்களது சொற்களை கட்டளைக்கல். மேனாட்டு "முன்னேற்றத்தை"ப் பாராட்டி அம்முன்னேற்றம் இந்தியர்க்கும் உரியதாகும்படி முயன்று பேசுவார் வார்த்தைகளைக் கொண்டே, அவை கருத்தின்றிக் கழறலாயின என்பதை முன் எடுத்துக் காட்டியிருக்கின்றோம். இனி, அந்நாகரிகத்தைப் பழிக்குஞ் சொற்களும் அத்திறத்தினவே ஆதல் கூடும் என்பதை இங்குச் சிறிது காணலாம். பேசுவாரிவர்—"வர்த்தகமென்றும் எந்திரங்களென்றும் கப்பலென்றும் துப்பாக்க்கி பீரங்கிகளென்றும், ஜனநாயகம் என்றும், ஓட் எடுப்பதென்று மின்னவைகளிலேயே கவனத்தைச் செலுத்தி, அதனால் செல்வம் ஈட்டுவதே பிறவியின் கருமம் என்றுநினைத்து, செல்வத்தின் மிகுதியால் சிற்றின்ப வாழ்க்கையில் ஆழ்ந்துகெடுகின்ற இந்த லோகாயத நாகரிகம் (Material civilization)

மிகக் கொடியது'' என்று ஆரம்பித்து, அதன் தீமைகளைப் பலவாறு வெறுத்தபின், "நமது பண்டை இந்திய நாகரிகமோ, ஆன்மவுணர்ச்சியோடு (Spiritual civilization) கலந்திருந்ததால் மிக்க பெருமைவாய்ந்தது. அதன் மேன்மையை உணராத சிலர் பற்பலவாறு அதனை இழித்துக்கூறுவதுண்டு. இதுமதியீனம். நம் பண்டைய நாகரிகத்தின் சிறப்புக்களைச் சொல்லவும் வேண்டுமோ'' என்னுமளவில், தேசாபிமானம் தலைசிறக்கவே, "முற்காலத்தில் இந்தியாவில் கப்பலும் கடல்கடந்த வணிகமும் இருந்ததில்லையா; ரோமாபுரி வரையிலும் நமது வர்த்தகம் பரவியிருந்ததென்பதைச் சரித்திர ஆராய்ச்சிகாரர் விளம்புகிறார்களே. ஆகாயக்கப்பலை அந்நாளிலேயே இந்த இந்தியர் அறிந்தனர் என்பதற்கு, பகைவர் புடைசூழ்ந்த கோட்டையிலிருந்து மன்னனதுதேவி விசையையென்பாள் மயிற்பொறியில் பறந்து அகன்றனள் என்று சீவகசிந்தாமணியில் கூறியிருப்பதே சான்றன்றோ! அரசரது ஆட்சி குடிகளுக்கு அடங்கியே நடந்தது. அமைச்சர்கள் சொல்வழியே அரசர் ஆற்றினர். கிராம காரியங்களைப் பார்ப்பதற்குப் பஞ்சாயத்தும் இருந்தது. கிராமத்தார்கள் ஓட்டுக்கொடுத்துக் கிராமத்தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைகளை நமது பண்டைநாட்களில் பரக்கக் காணலாம்'' என்று தக்க சான்றுகளும் காரணங்களும், கரகோஷங்களினிடையே காட்டிக்காட்டித் தம் கட்டுரையை முடிப்பவ ராகின்றனர். இதனைச் சொல்வோர் கேட்போர் இருதிறத்தோரையும் இயக்குகின்ற ஆர்வத்தினிடையே, சொல்லிய விடயத்தின் முதலிற்கும் முடிவிற்கு மெதிர்நடக்கும் முரண்களோ பெரும்பாலும் முழுகி மறைகின்றன. வர்த்தகம்முதல் ஓட்டு ஈறுகக் குறித்தவைகள் ஒன்றையும் இக்காலநாகரிகத்தின் மேன்மைக்கு அறிகுறியாகக் கொள்ளப்படாதென்றும், அன்னவைகளைக் கண்டு உகப்பது லோகாயத மனமே என்றும் துவக்கிய அவர், இக்கொள்கையைச் சிறிதுபொழுதினில் அறவே மறந்து, பழைய இந்திய நாகரிகத்தின் மேன்மைக்குச் சார்பாக முன் வெறுத்தவைகளையே சிறப்புப் பொருள்களென்று சாதிக்கப்புகுவது வம்போ விந்தையோ, மற்றுயாவதோ தெரியவில்லை.

உரைப்போர் கருத்து யாதாயினும், இவ்வித விபரீதம் நேர்வதன்காரணம், சிறிது நாம் சிந்திக்குமளவில், விளங்குகின்றது. நமது பண்டைய நாகரிகத்தின் பெருமைக்கு ஆதாரமாயிருந்தது எதுவெனும் உண்மையை உணர முயன்றவரல்லர் அவர். வாய்மையே நோக்கின் அதனை அறியவேண்டும் என்ற தனி முயற்சியும் வேண்டா. உணர்ச்சியெல்லாம், யாதும் முயற்சியின்றி, பரிதியும் மதியமும்போல் தாமே உதிக்கவேண்டியன. கலையெனும் விரிகடல் வெள்ளத்தினின்றே மெய்யுணர் முழுமதியுதிக்கும். அன்னவாறு உதிக்கப்பெற்றவர்களே மக்களது நன்மைக்கு எக்காலத்திலும் ஆதாரமாயிருக்கவல்லது இதுவென வோர் அசைவிலாது இயம்புதற் குரியவராவார். தமக்கு உதித்தது போல் மற்றவர்க்கும் உதிப்பதற்கேற்ற சாதனங்கள் இவையிவை யென்று உணர்த்தவல்லவர்களும் அவர்களே. அத்தகையவர்களில் ஒருவர் ஸ்ரீமான் K. S. இராமசுவாமிசாஸ்திரியா ராகிறாரென்பதைக் கடந்தவாரம் காட்டினோம். கடவுளென்னுங் கருந்தனத்திற் கண்ணோடாமல், பணத்தைச் செய்வதற்கும் அப்பணஞ் செய்வதற்கு ஏற்றதாயமைந்த ஆட்சி, வர்த்தகம், தனதாயம் முதலிய முறைகளை அமைப்பதற்கும் ஆரவாரம் செய்வதொழிந்து, இராமாயண மனைய உண்மைக் கலைநலம்பொங்கும் உயரிய நூல்களை ஓதியோதி உய்யுங்கள், என்றார் அவர். இன்னவகையில் அவர் மொழிகள் 'கலாநிலயத்தின்' கருத்திற்கு ஒக்க நடப்பது கண்டு உவப்பதாயினோம்.

உலகமுழுவதும் தலைதடுமாறும்படி இயக்குகின்ற நோக்கத்தினைப் பொதுவாகக் குறித்துப்பேசும் வகையில் கலாநிலயத்தின் கருத்து ஸ்ரீமான் இராமசுவாமிசாஸ்திரியாரது கருத்திற் கிணங்கியிருப்பது போன்றே, நம் இந்திய சமூகச் சீர்திருத்தமென்ற பெயரால் சிறப்பாக நிகழ்கின்ற சில இயக்கங்களைப் பற்றி எம்மோடு கருதுவார், கோவை வழக்கறிஞர் ஸ்ரீமான் S. K. சுப்ரமணியமுதலியார் ஒருவர் உளர் என்பது காண அளவிலாமகிழ்ச்சி பெருகுகின்றது. இவரும், ஸ்ரீமான் சாஸ்திரியாரவர்களைப் போன்றே, இலக்கியநலப் பெருமைகளை இனிதின் உணர்ந்துணர்ந்து கனிந்த உள்ளத்தினர். இவ்வாண்டினில், சென்னைச் சர்வகலாசாலையின் சார்பாக நிகழ்த்திய தமிழ்ச் சொற்பொழிவுகளில் இவர் பெரிய புராணத்தைப்பற்றிச் செய்த பிரசங்கமே, அகன்ற நோக்கினாலும் ஆழ்ந்த ஆராய்ச்சியாலும் மிகச் சிறந்ததென்பதற்கு ஐயமில்லை. அவ் வுபந்நியாசத்தினிடையே, சாதிக்கலப்பு, தீண்டாமை என்னு மிக்கொள்கைகளைக் குறித்து இவர் உரைத்த வாக்கியங்களை இங்குத் தருகின்றோம்:—

"சுந்தரமூர்த்திகள் உருத்திரகணிகையர் மரபில் அவதரித்த பரவையாரையும் வேளாளர்மரபிலே அவதரித்த சங்கிலியம்மையாரையும் மணஞ்செய்துகொண்டமை மேலே கண்டோம். பரவையாருடைய திருமாளிகையிலேதான், அரச மரபினராகிய சேரமான்பெருமாள் உபசரிக்கப்பெற்றனர். விளக்கு நிறைகுடம் பூமாலை புகை அகில் முதலியவைகளை மடவார் ஏந்தி எதிர்கொண்டார்கள். ஆளுடையநம்பிகளையும் சேரமான் பெருமாளையும் உடனே வைத்துப் பரவையார் நிறை பூசனைகள் முறையினாலே செய்தளித்தார்கள். வேண்டும் பரிசிலே வெவ்வேறு விதத்துக் கறியும் போனகமும் சமைப்பித்து விருந்தும் அமைத்துப் பரிகலங்களைப் பரவையார் தமது திருக்கரத்தாலே இரண்டு படியாக ஏற்றினர். அதனை நோக்கிய சுந்தரமூர்த்திகள் அதற்கிசையாது பெருமானை உடனே அமுதுசெய்தருள வேண்டுமென்று சொல்லி யருளினர். அது கேட்டுப் பெருமான் வணங்கி அது தகாதென்று உட்கொண்டு வெருவுற்றபோது, சுந்தரமூர்த்திகள் அவர் திருக் கையைப் பிடித்துக்கொண்டு மீண்டும் நேரே குறைகொள்ள அவர் இசைந்தனராகி இருபெரு மக்களும் தக்க இருந்து அமுதுசெய்தார்கள். இவர்களைப் பரவையார் அமுது செய்வித்தருளினர். எனவே அந்தணரும் அரசரும் மரபுவழக்கம்பற்றி உடனிருந் தமுது செய்வது அக்காலத்தில் உலக வழக்கிலே இல்லையென்றும் அன்புநெறியிலே இது நிகழ்ந்தது என்றும் விளங்கும். உடன்உண்ணுதல் என்ற சமபந்திபோஜனத்திலேயே எல்லாச் சீர்திருத்தமும் உலகஉயர்வும் உள்ளதென்றும் அதுவே மனிதவர்க்கத்தாருள் உள்ள வேற்றுமைகளை நீக்கி ஒற்றுமை உண்டாக்கக்கூடிய வழியென்றும் கூக்குரலிடுவோர் இக்கருத்துக்களைச் சிந்திப்பார்களாக. மனிதர்க்குள்ளே உயர்வும் தாழ்வும், ஒருவர் பார்க்க ஒருவர் உண்ணுதல் கூடாதென்னும் வேற்றுமைகள் இருந்தே தீரவேண்டுமென்றும், எவரும்சொல்ல

மாட்டார்கள். ஆனால் அவைகள் இருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது எந்தப் பேராலாவது எல்லா நாட்டிலும் இது ஒருவகையில் உள்ளதே யாகும். இதை ஒழிப்பதென்றால் மேலே காட்டிய அன்புநெறி ஒன்றினாலேதான் அது முடியும், குறித்த பயனும் தரும், வேற்றுமை ஒழிந்து ஒற்றுமை உண்டாகும். நாயும் கழுதையும் பார்த்துக்கொண்டிருக்க உண்ணும் மனிதன் ஏன் பிறமனிதன் பார்க்க உண்ணலாகாதென்பது ஒரு சரியான கேள்வி யாகாது. நாய்க்கும் கழுதைக்கும் மனிதனைப்போல் விகற்பமான பார்வை யில்லை. நாம் உண்பதைக் கண்டு அவைகள் வேற்றுமையான எண்ணங் கொள்வதில்லை. இந்த வகையில் மனிதன் அவற்றைவிடக் கீழாய்த்தா னிருக்கிறான். ஆனால் அன்புநெறிப் பார்வைபெற்ற மனிதன்மட்டுமே மேலாகிறான்.

* * *

"எனவே, எல்லாக் குலத்தோரும்சேர்ந்து சென்றதால் இழிவு தொடக்கிற்று, அதாவது இப்போது சொல்லப்படுகின்ற தீட்டு உண்டாயிற்று, என்பது அக்காலமும் இருந்த ஒரு கொள்கையா யிருந்ததென்றும் அந்த வேற்றுமையானது அன்பு நெறியினாலே இல்லாமற் போயிற்று என்றும் விளங்குகின்றது. இதனால் அக்காலத்துச் சாதிகளின் கலப்பு கூட்டுணவு முதலிய வேறுபாடுகள் ஓராயிரம் ஆண்டுகளுக்குமுன் முற்காலத் தமிழர் சமூக நிலையா யிருந்ததென்று தெரியலாம் இவ்வாறு சமூகம் பிரிவுபெற்றுள்ளது எந்நாளு மியல்பே. இதன் கேட்டினை வாராமற் காக்க அன்புநெறியினையே தமிழர் கைக்கொண்டனர் என்பதுந் தெரியலாம். அதனாலன்றிச் சாதி சமூக அமைப்புகளைத் தலைதடுமாறச் செய்தொழிக்க முயல்வது விபரீத உணர்ச்சியேயாம் என்பது வெளிப்படை.

மெய்யான மொழிகள் இவை. தமிழ்க்கலை பழுத்த உள்ளத்தால் உணர்வார்க்கல்லாது, அன்பொன்றே சாதி முதலிய பேதங்களைத் துடைக்கு மென்பது தோன்றாது. ஸ்ரீமான் சுப்ரமணிய முதலியாரவர்கள் விளம்பிய இவ்வாசகங்கள் மிகுந்த அநுபவத்தாலும் அநேககாலம் செய்திருந்த சிந்தனையின் பயனாகவும் பிறந்திருத்தல் வேண்டும். காவியப்பயிற்சி யொன்றே இவ்வகை உண்மைகளை உணர்விக்கும் என்னும் எம் கொள்கைக்கு ஸ்ரீமான் முதலியாரவர்கள் பெருமை அளிக்கின்றார். இப்பெரியோரும் கலாநிலயத்திற்கு அண்மிய உறவினராகின்றன ரென்னற்கு, இவ்விதழ்களில், முன்

"மனிதர் தாமதகுணம் மிகுந்து கெடக்கெட அவர்கள், சாதியையும் மதத்தையும் சட்டத்தையும் மற்றுள யாவற்றையும் கெடுத்து விடுவதே உண்மையென்பது ஓராது, சாதி மதம் முதலியன அவர்களைக் கெடுத்து விடுவதாக விவகரிப்பதால் விளையும் பொல்லாங்கு சிறிதன்று. இது நிலையைப்பற்றிய பிழை. ஆன்மசுத்தியைத் துரும்பாகவும் ஆசாரத்தை மலையாகவும் மதிப்பது அளவுபிறழ்ந்த பிழை. எச்சாதியார்க்கும் மனமென்பது ஒன்றேயென்றறியாமல் வெளியொழுக்கங்களே வாழ்க்கையெனப் பேசுவது இடப்பிழை.

[முப்பிழை - வால். 1. பக்கம் 502]

என்றும்,

"தீண்டாமை, சாதிபேதம் முதலியவைகளில் தீமை உளவாயின் அத்தீமைகள், அன்னவைகளைச் சார்ந்து நிகழ்கின்ற மனதின்கண் இருப்பனவாதலால், அம்மனது அன்புபெற்றுத் துளங்கத் துளங்க அவை தாமே விலகும். விலக்கமுயல்வது வீணுவதன்றி விபரீதமாக முடிவதுங் கூடும்''

[விலகவோ விலக்கவோ - வால். 1. பக்கம் 962]

என்றும், குறித்துள சில வாக்கியங்கள் உதவிசெய்யும். அன்புநெறி அமைவதல்லால் பிறமுயற்சிகளெல்லாம் பேதைமை. அவ்வொரு நெறியில் உய்ப்பது கலைப்பயிற்சியே. இதனை முதலியாரவர்கள் நன்கு காட்டித்தந்தார். இக்காலத்தில் இவரனைய பெருமக்கள் அருமருந்து போல்பவர் என்னல் வேண்டுமோ.

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினுன்கு கலைகளும்

7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[304-வது பக்கத் தொடர்ச்சி]

II வஞ்சி.

வெட்சியும் கரந்தையும் குறிஞ்சிக்குப் புறமாதல் போல் வஞ்சி, * முல்லைத்திணைக்குப் புறனாகும்.† இது மண்ணாசையால் ஒருவேந்தன் மற்றொரு வேந்தன் ஆளும்நாட்டிற்குச் சென்று போர்தொடுப்பதாம். இது பல துறைகளை யுடைத்து ‡

* வஞ்சி யென்பது ஒருவகைக் கொடி-சிறுகாடுகளிற் காணலாம்.

† வஞ்சி தானே முல்லையது புறனே
யெஞ்சா மண்ணசை வேந்தனை வேந்த
னஞ்சுதகத் தலைச்சென் றடல்தொடுத் தன்றே.
இலக்கணவிளக்கம். 605

‡ வாடா வஞ்சி மலைதலும், ஓடாப்
படையியங் கரவமும், குடைநாட் கோளும்,
வாணாட் கோளும், பேணா ருட்கும்
கொற்றவை நிலையும், வெற்றிவே லுழவர்
செய்தொழில் கூறிய மற்றதன் பகுதியும்,
மறிதிரை யுலகம் வணங்கவெஃ குயர்த்த
குரிசிலை வழுத்திய கொற்ற வஞ்சியும்,
வேந்தனைப் புகழ்ந்து வேற்றுநா டழிபு
கூர்ந்தமைக் கிரங்கிய கொற்ற வள்ளையும்,
பொருமுறை பகையொடு பொருத வீரர்க்குப்
பெரிதருள் சுரந்த பேராண் வஞ்சியும்,
அருந்திறை யளப்ப வாறிய சினத்தொடு
பெரும்பூண் மன்னவன் பெயர்ந்த பக்கமும்,
திண்ணிய வேந்திற் சிறப்புற் றோர்பெறூஉம்
வண்மை கூறிய மாராய வஞ்சியும்,
செறியலர் போர்க்களஞ் சென்றுதன் றாண்மை
நெறியெடுத் தியம்பிய நெடுமொழி வஞ்சியும்,
தொன்னெறி மரபின் வாட்குடித் தோன்றிய
முன்னவ னிலைபுகன் முதுமொழி வஞ்சியும்
கூடலர் நாட்டுக் கொடிநெடு வியனூ

இவற்றை நோக்குமிடத்துப் பண்டைக்காலத்தில் நமது நாட்டில் தேசாபிமானமும், குடிகளுக்கும் அரசனுக்கு மிடையேயுள்ள அன்பும் வெளியாகும். இத்துறைகளில் கலைசஞ்சிறந்து காணப்படுவது கொற்ற வள்ளையாம்—(வள்ளையென்பது உலக்கைப்பாட்டு). நமது இலக்கியத்தில் மிகச்சிறந்த வள்ளை, திருவாசகத்தில் திருப்பொற்சுண்ண மென்னும் பதிகம். இதைப் பற்றி அதிகம் கூறவேண்டியதில்லையாதலால், இத்தொழிலை விளக்கும் இரண்டு பாசுரங்களை வரைவோம்

காசணி மின்க ளுலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்கள் நின்று
நிலாவுக வென்று வாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங் கச்சித்திரு
வேகம்பன் செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணமி டித்துநாமே.

அறுகெடுப் பாரய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்,
நறுமுறு தேவர் கணங்களெல்லா
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்!
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்போற் சுண்ணமி டித்துநாமே

திருப்பொற் சுண்ணம் - 45.

அப்பர் தேவாரத்தில் வள்ளைக்கு உதாரணமாகக் காட்டக்கூடிய பதிகம் காணப்படவில்லை. ஆயினும் ஏனைய துறைகளை விளக்குஞ் செய்யுள்கள் பலஉள:-

குடைநிலை வஞ்சி:—இதன் இலக்கணம் வருமாறு:—

பெய்தாமஞ் சுரும்பிமிரப் பெரும்புலவர் புகழ்பாடக்
கொய்தார் மன்னவன் குடைநாட் கொண்டன்று.

புறப்பொருள் வெண்பாமாலை.

கயிலாயத்தைப் பகையுடன் பொர்க்கு முன்னர் இராவணன் நின்ற நிலையால் அப்பர் இவ்வஞ்சியை விளக்குவார்:—

குடையுடை யரக்கன் சென்று குளிர்கயி லாய வெற்பின்
இடைமட வாலை யஞ்ச வெடுத்தலு மிறைவ னோக்கி
விடையுடை விகிர்தன் றானும் விரலினா லூன்றி மீண்டும்
படைகொடை யடிகள் போலும் பழனத்தெம் பரம னாரே

திருப்பழனம் - திருநேரிசை 10.

கொற்ற வஞ்சி:—இதன் இலக்கணம்:—

வையகம் வணங்க வாளோச் சினனெனச்
செய்கழல் வேந்தன் சீர்மிகுத் தன்று.

புறப்பொருள் வெண்பாமாலை.

இதன் உதாரணம்.

காற்றனல் காலற் காய்ந்து காருரி போர்த்த வீசர்
தோற்றனர் கடலுணஞ்சைத் தோடுடைக்காதர்சோதி
ஏற்றினா ரிளவெண்டிங்க ளிரும்பொழில் சூழ்ந்தகாயம்
பாற்றினர் வினைக ளெல்லாம் பழனத்தெம் பரமனாரே.
கண்ணனும் பிரம னோடு காண்கில ராகி வந்தே
எண்ணியுந் துதித்து மேத்த வெரியுரு வாகி நின்று
வண்ணநன் மலர்கடூவி வாழ்த்துவார் வாழ்த்தியேத்தப்
பண்ணுலாம்பாடல்கேட்டார்பழனத்தெம்பரமனாரே.

திருப்பழனம் - திருநேரிசை 8, 9.

பெருந்தீனி கொள்ளும் குண்டோதரன் முதலானோர் சிவபெருமானைச் சூழ்ந்திருப்பது நமக்குப் பெருஞ்சோற்று வஞ்சியை நினைப்பூட்டும் *.

பெருவஞ்சி—இதன் இலக்கணம் வருமாறு:—

முன்னடையார் வளநாட்டைப்
பின்னருமுடன் றெரிகொளீ இயன்று

புறப்பொருள் வெண்பாமாலை.

தேவாரஉதாரணம்-சிவபெருமான் முப்புரங்களைத் தீயிடல்:—

அலையடுத்த பெருங்கடனஞ் சமுதா வுண்டு
வமரர்கடந் தலைகாத்த வையர் செம்பொன்
சிலையெடுத்து மாநாக நெருப்பு கோத்துத்
திரிபுரங்க டீயிட்ட செல்வர் போலும்
நிலையடுத்த பசும்பொன்னான் முத்தா னீண்ட
நிரைவயிரப் பலகையாற் குவையார்த் துற்ற
மலையடுத்த மழபாடி வயிரத் தூணே
யென்றென்றே யானரற்றி நைகின் றேனே.

திருமழபாடி - திருத்தாண்டகம் 1.

கண்ணினாற் காமவேளைக் கனலெழ
விழிப்பர் போலும்
எண்ணிலார் புரங்கண்மூன்று மெரியுணச்
சிரிப்பர் போலும்
பண்ணினார் முழவ மோவாப்
பைம்பொழிற் பழனை மேய
அண்ணலா ரெம்மை யாளு
மாலங்காட் டடிக ளாரே.

திருவாலங்காடு - திருநேரிசை 3.

கன்றினார் புரங்கண் மூன்றும்
கனலெரி யாகச் சீறி
நின்றதோ ருருவந் தன்னா
னீர்மையு நிறையுங் கொண்டு
ஒன்றியாங் குமையுந் தாமு
மூர்பலி தேர்ந்து பின்னும்
பன்றிபின் வேட ராகிப்
பருப்பத நோக்கி னாரே.

திருப்பருப்பதம் - திருநேரிசை 4.

நூடெரி யூட்டிய வுழுபுல வஞ்சியும்,
குறுகல ருமுனை கொள்ளை சாற்றி
மறுகுறக் கவர்ந்த மழபுல வஞ்சியும்,
நீடவும் குறுகவும் நிவப்பவும் தூக்கிப்
பாடிய பாணர்க்குப் பயந்தகொடை வஞ்சியும்,
மடுத்த வேந்தற்கு வழங்குவ வழங்கிக்
குடிக்கருள் சுரந்த குறுவஞ்சி யானும்
மட்டூர் தெரியன் மறங்கெழு வேந்தன்
கட்டூர் வகைமை கட்டுரைத்த பக்கமும்,
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
வொருவன் தாங்கிய வொருதனி நிலையும்,
அழியுநர் புறக்கொடை யயில்வா ளோச்சாக்
கழிதறு கண்மைத் தழிஞ்சியும், அதாஅன்று
மதிக்குடை வேந்தன் மாற்றலர் வணங்கவும்
பதிப்பெயர் கில்லாப் பாசறை வஞ்சியும்,
முன்னடை யாதார் வளங்கெழு நாட்டைப்
பின்னுமெரி யூட்டிய பெருவஞ்சி யானும்,
இறைவன் வயவர்க் கிருஞ்சோற் றமலை
பெறுமுறை யுதவிய பெரிஞ்சோற்று நிலையும்,
வெளிகெடப் பகைமுனை யிறுத்த வேந்தன்
நளிவிறன் மிகுத்த நல்லிசை வஞ்சியும்,
இறுத்தபி னடழி பிரங்கிமறுத் துரைத்த
பக்கமும், எனமுறை தொக்க வையைந்து
நல்லிசைப் புலவர் நாடினர் தெளிந்து
சொல்லிய வஞ்சித் துறையெனப் படுமே. ஷை 606

* தண்டி குண்டோ தரன்பிங் கிருடி
சார்ந்த புகழ்நந்தி சங்கு கன்னன்
பண்டை யுலகம் படைத்தான் றானும்
பாரை யளந்தான் பல்லாண் டிசைப்பத்
திண்டி வயிற்றுச் சிறுகட் பூதம்
சிலபாடச் செங்கண் விடையொன் றூர்வான்
கண்டியூர் கண்டியூ ரென்பீ ராகிற்
கடுகநும் வல்வினையைக் கழற்ற லாமே.

பலவகைத் திருத்தாண்டகம் 7.

குறுந்தொகை.

[311-வது பக்கத் தொடர்ச்சி]

அள்ளூர் நன்முல்லையார்] 32 [குறிஞ்சி

தலைவியின் கூட்டத்தைத் தோழியாற் பெறல்வேண்டி அவளை இரந்துபின்னின்ற தலைமகன், தன்குறையை அவள் மறுமற்பொருட்டு, 'என்னை மடலூருமாறு செய்தல் உமக்குப் பழி' எனச் சொல்லியது.

காலையும் பகலுங் கையறு மாலையும்
ஊர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்;
மாவென மடலொடு மறுகிற் றோன்றித்
தேற்றெனத் தூற்றலும் பழியே;
வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே.

(உரை). காலை, பகல், செயலற்றுப் போவதற்குக் காரணமான மாலை, ஊரிலுள்ளாரெல்லாம் துயிலும் நள்ளிரா, விடியற்காலம், (என்ற) பொழுதுகளின் வேறுபாட்டை (ஒருவர்) உணர்வாராயின், அவருடைய காமம் (மெய்யான காமமன்று) பொய்யே. (அத்தகையது அன்று எனது காமநோய்). ஆதலின், பாய்மா என்று ஒரு பனைமடல் மீதேறித் தெருவிலே தோன்றி (உனது காமம் மெய்யென்பதை) தெளியக் காட்டு' என என்னைப் பழித்தகற்றலும் (உங்களுக்குப்) பழிதருஞ் செயலே; (காதலியைப்) பிரிதல் நேர்ந்தபோது உயிர்வாழ்தலும் (எனக்குப்) பழிதருஞ் செயலே.

யாமம் - நடுராத்திரி. பொழுதிடை - பொழுதுகளினிடத்துள்ள வேற்றுமை; இடை (ஆகுபெயர்) இடத்துள்ள வித்தியாசம். இடை - இடைவெளி; இடையிலுள்ள நேரம் (interval) என்றுமாம். பொய்யே - ஈற்றேகாரம் தேற்றம். தேற்று - தெளிவி.

'காலையும்...பொய்யே காமம்' என்றது 'இதுகாலை, இது பகல், இதுமாலை, இது நள்ளிரா, இது வைகறை என்றும், இவ்விப்பொழுதுகளில் செய்தற்குரிய தொழில்கள் இவையென்றும் உணரமாட்டாது இடையீடின்றி வருந்துவதே மெய்க்காமம், என்பதாம்.

படுமரத்து மோசிகீரனார்] 33 [மருதம்

தனது புறவொழுக்கங் காரணமாகப் புலந்த கிழத்தியின் ஊடலை உணர்த்தும்வாயிலாகத் தலைமகன் அனுப்பிய பாணனைத் தலைமகள் இழித்துக் கூறியது.

அன்னாய், இவனோ ரிளமா ணாக்கன்;
தன்னூர் மன்றத் தென்ன கொல்லோ
இரந்தூ ணிரம்பா மேனியொடு
விருந்தி னூரும் பெருஞ்செம் மலனே.

(உரை). தோழீ, இவன் (கல்வியும் அறிவும் நிரம்பாத) ஓர் இள மாணாக்கனாக இருக்கின்றான். (இவன்) தன்னூர்(ப் பாத்தையர்)ச் சேரியிலே உணவை இரந்தும் என்ன காரணத்தாலோ நிரம்பப் பெறாது இளைத்த மேனியோடு புதிய வேறிடங்களிலும் (இரந்து) செல்லும் மிக்க பெருமையை உடையவன்.

காமுகர்க்குத் தூதாய்ப்பாத்தையர் வீடுதோறுஞ் சென்று யாழ்வாசித்துப் பிச்சையேற்கும் பெற்றிநோக்கி அவனை 'மாணாக்கன்' என்றும், தன் தொழிலிற் தேர்ச்சிபெறாது வேண்டுவாரிடத்தும் வேண்டாதாரிடத்துஞ் சென்று தக்க சமயமிது தகாததிது என்றும் நோக்காது கற்பித்ததையே கூறும் செயல்நோக்கி 'இள' மாணாக்கன் என்றும் அவனை இகழ்ந்துரைத்தவாறும்.

மன்றம் - பொதுவிடம், பாத்தையர்சேரி. விருந்து - புதுமை; ஈண்டு, புதியவிடங்கள். 'செம்மலன்' என்றது குறிப்புமொழி; 'இழிதகையன்' என்னும் பொருளது.

கோல்லிக்கண்ணன்] 34 [மருதம்

தலைமகளை அவன்தமர் தலைமகனுக்கு வரைவு நேர்ந்ததை அறிந்து அவளுக்குத் தோழி கூறியது.

ஒறுப்ப வோவலர், மறுப்பத் தேறலர்,
தமிய ருறங்குங் கௌவை யின்றாய்
இனியது கேட்டின் புறுகவிவ் வூரே;
முனாஅ தியானையுண் குருகின் கானலும்
பெருந்தோட்ட மள்ள ரார்ப்பிசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை யன்னவெங்
குழைவிளங் காய்நுதல், கிழவனு மவனே.

(உரை). எதிர்ப்புறத்தே யானைகள் (வந்து) உண்ணும் குருக்கத்திச்சோலையையுடைய கடலும், பெருந்தொகுதியராகிய தனது படைவீரர்களின் ஆரவாரத்தைக்கேட்டுஅஞ்சுவதற்குக் காரணமான குட்டுவன்சேரலாதனது ஊராகிய மாந்தையையொத்த குழைகள் விளங்கும் அழகிய நுதலையுடைய தோழியே, தாய்முதலியோர் கடிந்து அடக்கவும் (அடங்காது) வருந்துதலை ஒழியாராய், வருந்துதல் கூடாதென்று வற்புறுத்தவும் தெளியாராய்த் தமியராய் (துயில் கொள்ளாது) படுத்துப் புலம்புறு மகளிரைப்பற்றி எழுந்த அலரைக் கேளாதொழிந்து (வரைவு மலிந்த) இனிய செய்தியைக் கேட்டு இவ்வூரார் இன்புறுவாராக; உனக்குக் கணவனாக அமைந்தவனும் (உன்னைக்களவினிற்கலந்த) அவனே.

கௌவை - அலர்மொழி. குருகு - குருக்கத்தி. கானல்-கடற்கரைச்சோலை; ஈண்டு, கடல். தோட்ட, தோடு - தொகுதி, குழு. குட்டுவன் - கடல்பிறக்கோட்டிய குட்டுவன் சேரலாதன். மாந்தை - ஒரு நகரம்; இது 'மரந்தை' யென்றே ஐங்குறுநூற்றுப் பதிப்பில் காணப்படுகின்றது. ஆய்நுதல், அன்மொழித்தொகை, அண்மைவிளி. குழைவிளங்குநுதல் - காதணியாகிய குழை விளங்குவதற்குக் காரணமான அழகிய நுதலென்க. ஆய் - அழகு; ஆராய்வதற்குரிய (அழகு வாய்ந்த) என்றுமாம்.

'குருகின்கானல்...மள்ளர் ஆர்ப்பிசைவெரூவும்குட்டுவன்' என்றது கடலைவென்று "கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்" என்னும் சிறப்புப்பெயர் பெற்றமையை விளக்கும். இச்செய்தியைப் "பதிற்றுப்பத்தில்" பரணர் பாடிய ஐந்தாம்பத்திற் காண்க.

"மாந்தையன்ன ஆய்நுதல்" - தலைமகளைப் பாட்டுடைத் தலைவனது "நகரை யன்னாள்" எனப் புகழ்தல் ஒரு கவி மரபு; 'சிவன்தில்லையன்னாய்' (திருக்கோ. 45) 'இறை புலியூரனையாள்' (ஷை. 66); "முன்னோன் புலியூர் புரையும் கன்னி" (ஷை. 78); 'மாறன் வண்கூடலன்ன இளையாளொருவர்' (இறையனார்; மேற்கோள், 25), 'பூலந்தை வென்றான் புகாரனைய...மடந்தை' (ஷை. 173); 'வாணன் தென்மாறை யன்னீர்' (தஞ்சைவாணன். 65); 'வாணர் பிரான் தமிழ்நா டனையாய்' (ஷை. 86) முதலியவற்றால் இதனை யறிக.

கழார்க்கீரனெயிற்றியார்] 35 [மருதம்

தலைமகனது பிரிவை ஆற்றாது வருந்திய தலைவி, தோழிக்குச் சொல்லியது.

நாணில மன்றவெங் கண்ணே; நாணேர்பு
சினைப்பசும் பாம்பின் சூன்முதிர்ப் பன்ன
கனைத்த கரும்பின் கூம்புபொதி யவிழ
நுண்ணுறை யழிதுளி தலைஇய
தண்வரல் வாடையுநம் பிரிந்திசினோர்க் கழலே.

(உரை). உண்மையாக, எனது கண்கள் வெட்கமுற்றில; பசும்பாம்பின் முட்டையாகிய கருவினது முதிர்ச்சியைப் போன்ற செறிந்த கரும்பினது தலைக்குவிவு (முதிர்தற்குரிய) நாளை நேர்ந்ததினால் கட்டவிழும்படி (தலைவிரியும்படி) நுண்ணிய மிக்க மழைத்துளியைச் சொரிந்த குளிர்ந்த வருகையையுடைய வடகாற்று வந்ததும் நம்மைப் பிரிந்தவரை நினைந்து அழுதற்கு.

"வாடையும் (வந்ததும்) நம் பிரிந்திசினோர்க்கு அழலை நாணில மன்ற எங் கண்ணே"என்ன உருபுவிரித்து அனுவயிக்க.

நாணேர்பு, நாள் நேர்பு; நாளை நேர்ந்து. பசும் பாம்பின் சினைச்சூல், என மாற்றிக்கொள்க. கனைத்த - செறிந்த (கூம்பு). உறை- மழைத்துளி. அழிதுளி - மிக்க துளி. தலைஇய -சொரிந்த; 'அழிதுளி தலைஇய புறவு' (ஐங்குறுநூறு 413) என்றார் பிறரும். வாடை-வடகாற்று,ஈண்டு ஆகுபெயராய் அக்காற்று வீசும் முன்பனிக் காலத்தைக் குறித்து நின்றது. அழல் - அழலை, அழுதலை, அழுதற்கு. 'நம் பிரிந்திசினோர்க்கு அழல் நாணில எங்கண்ணே' எனக் கூட்டுக. இவ்வாறு நம்மை வருத்தும் வாடை நம்மைப் பிரிந்த தலைவர்க்கும் அழலாய் (தீப்போல்) அங்கே வருத்துகின்றிலதோ?' என்றும் உரைக்கலாம்,

---

பரணர்] 36 [குறிஞ்சி

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவழி, தான் ஆற்றுளெனக் கவன்ற தோழிக்குத் தலைவி கூறியது.

துறுகல லயலது மாணை மாக்கொடி
துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சு களனாக 'நீயலேன் யான்' என
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தவாஅ வஞ்சின முரைத்தது
நோயோ, தோழி, நின்வயி னானே.

(உரை) தோழீ, செறிந்த கற்பாறையின் இடத்துள்ள பெரிய மாணைக்கொடி, பக்கத்திலே தூங்கும் யானையின் மேலே தாவிப்படரும் மலைநாட்டுக்குத் தலைவன், எனது நல்ல தோள்களைத்தழுவிக் கூடிய அன்று, "எனது நெஞ்சை நீ (என்றும் தங்கும்) இடமாக(க்கொண்டு) இருத்தலின், நான் (நின்னின் வேறு) அல்லேன்" என்று அவன் பொய்யாத வஞ்சினம் மொழிந்தது, உனக்குத் துன்பத்தைத் தருவதொன்றோ?

துறுகல் - திண்ணிய பாறை. 'அயலது' என்பதைக் 'களிறு' என்பதனோடு இயைக்க. இவரும் - ஏறிப்படரும். களன் - (தங்கும், உறையும்) இடம். மணந்த - தழுவிய. ஞான்றை - ஞான்று; ஐ, சாரியை. தவா - தவ்வாத, கெடாத, தவறாத, பொய்க்காத.

பாலைபாடிய பெருங்கடுங்கோ] 37 [பாலை

பொருள்வயிற் பிரிந்த தலைமகனது பிரிவு நீட்டித்தவழி, ஆற்றாது வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவிக்கக் கூறியது.

நசைபெரி துடையர், நல்கலு நல்குவர்;
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பிளக்கும்
அன்பின், தோழி, அவர்சென்ற வாறே.

(உரை). தலைவர் (உண்மையாக நம்மிடத்து) மிக்க அன்பினை உடையவர்; (ஆதலின்) அவர் (கடந்து) செல்லும் (காட்டு) வழியிடைப் பெரிய ஆண்யானை தனது பிடியின் பசியை நீக்கும்பொருட்டு மெல்லிய கிளைகளையுடைய யாமரத்தை முறிக்கும் அன்பைக்கண்டு (பொருளீட்டும் ஆசையால் சேணகன்று தங்கும் தமது எண்ணத்தை விட்டு விரைந்து மீண்டு) நம்மை அருளினும் அருளுவர், (நீ வருந்தாதே).

நசை - அன்பு. நல்கல், அருளுதல், அருள்புரிதல், தலையளிசெய்து கூடியிருத்தல். களைஇய - களையும்பொருட்டு, யா - பாலைவனத்துக் குரியதொரு மரம்.

"நெருப்பவிர் கனலி உருப்புச்சினந் தணியக்
கருங்கால் யாஅத்து வரிநிழ லிரீஇ" (ஐங்குறு-388)

என்றார் பிறரும்.

யா+பிளக்கும்=யா+அ+ம்+பிளக்கும்= யா அம் பிளக்கும்' என அகரச்சாரியையும் இனமெல்லெழுத்தும் பெற்றது: (தொல்கா - எழுத்து - உயிர்மயங்கியல், 24, 26). அன்பின்—அன்பினால், அன்பைக் கண்டதனால். ஆறு - ஆற்றின்கண் என ஏழனுருபு விரிக்க.

அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.
(தொல் - பொருளதி - பொருளியல், 37).

என்றாராகலின் இவ்வாறு தலைவியைத் தோழி வற்புறுத்தினள்.

கபிலர்] 38 [குறிஞ்சி

வரைந்துகொள்ளாது, களவொழுக்கத்தி னிடையே தலைமகன் ஒருவழித் தணந்தகாலத்துத் தலைவி ஆற்றாது தோழிக்குக் கூறியது.

கான மஞ்ஞை யறையின் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்றுமன், வாழி தோழி; உண்கண்
நீரொ டோராங்குத் தணப்ப
உள்ளா தகறல் வல்லு வோர்க்கே.

(உரை). தோழீ, காட்டில் வாழும் மயிலின் முட்டையை வெயிலிலே விளையாடும் குரங்குக்குட்டி பாறையின்மீது உருட்டும் குறிஞ்சிநாடனது நட்பு என்றும் பெரியதாயிருந்தது, இப்பொழுது கழிந்தது. (அவர் ஒருவழித் தணந்திருக்க, நான் இங்கே)மையுண்டகண்கள் சொரியும் நீரோடு (நீங்காத்துயருற்று) வருந்துவதை நினையாது கைவிட்டு நீங்கவல்ல (வன்னெஞ்சையுடைய) வர்க்கு யான் படுந்துயரைத் தெரிவிப்பார் ஒருவரும் இல்லையே; (என்செய்கேன்).

அறை - கற்பாறை, 'அறையின்' என்பதை 'உருட்டும்' என்பதனோடு கூட்டுக; "அறையின் வெயிலாடு குருளை" என்றும் இயைக்கலாம், நன்று - பெரிது. 'நீரோடு வருந்துவதை ' என்றும், 'வல்லுவோர்க்கு அறிவிப்பார் இல்லையே' என்றும் சொல்லெச்சங்களை வருவித்துரைக்க. ஓராங்குத் தணப்ப - ஒருவழித்தணப்ப; ஒருவழித்தணத்தலாவது, தமது களவொழுக்கம் வெளியாகி அலரெழுந்ததைத் தோழியாலுணர்ந்த தலைமகன் அவ்வலர் அடங்குமட்டும் தான் தலைவியை விட்டுப்பிரிந்து ஓரிடத்திலேயே சில நாள் தங்கியிருத்தல். வல்லுவோர் - வல்லுவார், வல்லார்.

ஔவையார்] 39 [பாலை

தலைமகனது பிரிவின்கண் தலைவியினது ஆற்றாமைக்குக் கவன்றதோழிக்குத் தன்வருத்தம் பிரிவாற்றாமையானன்று, அவன் சென்ற சுரத்தின் கொடுமையைக் குறித்தென்று தலைவி சொல்லியது.

வெந்திறற் கடுவளி பொங்கர்ப் போந்தென
நெற்றவிளை யுழிஞ்சில் வற்ற லார்க்கும்
மலையிடை யருஞ்சுர மென்பநம்
முலையிடை முனிநர் சென்ற வாறே.

(உரை). நம்முலையிடத்துத் துயிலுதலை வெறுத்தகன்ற நங் காதலர் சென்றவழியிலே, மலைகளினிடையே மிக்கவலியுள்ள கடுங்காற்றுத் தங் கிளைகளின்மீது அடித்ததும், நெற்றுக்களையுடைய நன்றாயுலர்ந்த வாகைகள் ஒலித்தலைச் செய்யும் கடத்தற்கரிய சுரம் உளது என்பார்கள்; (அதற்கு வருந்துகின்றேனன்றி வேறொன்றுக்குமன்று.)

பொங்கர்-மரக்கிளை. 'போந்தென' என்பது, க, ட, த, ற, ஊர்ந்து இறந்தகாலம்பற்றி, முடிக்குஞ்சொல்லால் உணர்த்தப்படும் தொழிற்குத் தன்முதனிலைத்தொழில்,காரணமாய் விரைவுப்பொருளை உணர்த்தும் 'செய்தென' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; கீழ் ஐந்தாம் பாட்டில் 'மெல்லம் புலம்பன் பிரிந்தென' என்றவிடத்துப்போல. நெற்று - நன்றாய் முதிர்ந்து நீர்வற்றிய காய். உழிஞ்சில்-வாகைமரம். ஆர்க்கும் - ஒலிக்கும், முனிதல் - வெறுத்தல். சென்றஆறு- சென்ற ஆற்றின்கண்.

செம்புலப் பெய்ந்நீரார்] 40 [குறிஞ்சி

இயற்கைப்புணர்ச்சியின் இறுதியிற் பிரியலுற்ற தலைமகனைப் பின்னுங் கூடப்பெறுவலோ என்று ஐயுற்றுக் கவன்ற தலைமகளை அவன் வற்புறுத்தித் தேற்றியது.

யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையு நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானு நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே.

(உரை). (என்) தாயும் (உன்) தாயும் என்ன தொடர்பினை உடையார்? எனது தந்தையும் உனதுதந்தையும் எவ்வித முறைமையினை உடைய சுற்றத்தார்? யானும்நீயும் எவ்விடத்து (ஒருவரையொருவர் முந்தி) அறிந்துள்ளோம். (இவ்விதம் யாதொருசம்பந்தமும் இல்லாதிருக்கவும்) நம்மிருவரது அன்பையுடைய நெஞ்சமும் செம்மண் நிலத்தில் வார்க்கக்பட்ட நீரைப்போல ஒன்றாய்க் கலந்துவிட்டன. (ஆதலான் இது தெய்வத்தான் இயைந்ததோர் கூட்டம்; இதற்கு யாதொரு இடையீடும் நேராது.)

"செம்புலப் பெய்ந்நீர் போல" என்றது,செம்மண்நிலத்திலே வார்க்கப்பட்ட நீர் அந்நிலத்தின் நிறத்தைத்தான் உடனே பெற்று அம்மண்ணோடு கலந்து ஒன்றாய் விடுவது போல இவ்விருவர் மனமும் தம்மில்தாங் கலந்து ஒன்றின என்றவாறும். இப்பாட்டில் இவ்வழகிய உவமையை இவர் ஆண்டமையால் இயற்பெயர் இன்னதென்று விளங்காத இவர்க்கு இந்நூலைத் தொகுத்தார் இப்பெயரைக் கொடுத்தார் போலும். இவ்வாறே பின் வருமிடத்தும் கொள்க.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[308-வது பக்கத் தொடர்ச்சி]

நடத்தை (Behaviour).

விடுப்பு-மருட்கை. குழந்தைகள் அப்பொருளையும் இப்பொருளையும் தொட்டுப்பார்த்து "இஃதென்ன," "அஃதென்ன" என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இதனை விடுப்பு (Curiosity) என்பர். இவ்வியற்கைச் செயனிலைக் கேற்ற மெய்ப்பாடு மருட்கை யாகும். மருட்சி எழுந்தால் அன்றோ தெருட்சி தொடர்கின்றது. நாம் முன்னறிந்த பொருளோடு ஒற்றுமையுடைய பொருளைக் காண்கிறோம். ஆனால் அப்பொருள் முன்கண்டதினும் சிறிது மாறுபட்டுத்தோன்றுகின்றது. வேற்றுமையால் உண்டாகும் புதுமையை ஆராயவே இச்செயனிலை எழுகின்றது; மருட்கை பிறக்கின்றது. ஆவினைக்கண்டேன்; பின்னர் ஆவேபோன்றிருக்கும் ஆமாவினைக் காண்கிறேன்; விடுப்புநிலை செயலுறுகின்றது; மருட்கை எழுகின்றது. இம்மருட்கை வியப்பினும் வேறு. விடுப்பு அளவாக இருப்பது. வேற்றுமை மிகுதியாதலினால் காணப்படுபொருள் பெரும் புதுமையாகத் தோன்றினால் அச்சம் பிறக்கும். ஆதலாற் சிறிதளவு புதுமையுள்ள பொருளே இச் செயனிலையை எழுப்புகின்றது. இதற்கென்று குறிக்கப்பட்ட காட்சிப் பொருள் ஒன்று இல்லையாதலின் சிறிதளவு புதுமை கண்ட இடத்தெல்லாம் இவ் விடுப்பும் மருட்கையும் பிறக்கின்றன. துணிந்து ஒரு முடிவுக்கு வாராமல் தயங்குகின்றோம்; பொருளை ஊன்றி நோக்கி ஆராய முற்படுகின்றோம். தெளிவுணர்வே இச் செயனிலையின் முடிவு. தெளிவுணர்வு நிகழ்ந்தபின்னரே மற்றைய செயனிலைகள் பிறக்கின்றன. மற்றைய செயனிலைகள் தடைபட்டபோது அவற்றை மாற்றி வெகுளி எழுகின்றதெனக் கண்டோம். ஆனால் விடுப்போ மற்றைய செயனிலைகள் எழுவதற்கு முன்னரே செயலுறுவதென அறிகின்றோம்.

"அழலின் நீங்கான் அணுகான்" இடைநின்று குளிர்காய்வதுபோல விடுப்புள்ள உயிருளியும் காட்சிப்பொருளைத் தொடு மவ்வளவு அருகிற்போவதில்லை; கண்டறிய முடியாத அவ்வளவு தொலைவிலும்

போவதில்லை. ஒருவயலில் ஆடுகள் பசும்புல்லை மேய்ந்துகொண்டிருக்கின்றன, இடையே ஓர் புதாருகே மறைந்து கத்துகின்றேன். அவ்வொலி கேட்டு அவை சிறகச்சிறக முன்வந்து அப்புதரைச் சுற்றி நிற்கின்றன. அவ்வொலியைப் பற்றி அறிவதே அவற்றின்நோக்கம். ஆனால் புதரை அவை தொடுவதில்லை. நீங்காதும் அணுகாதும் நிற்கின்ற இவ்விடையாட்டமே விடுப்பு நிலையில் பெரிதும் காணப்படுகின்றமையால், தொலைவறி புலன்களாகிய காட்சி கேள்வி முகர்தல் என்ற மூன்றே இந்நிலையைச் செயலுறுத்துவன. தொட்டும் உண்டும் பார்த்தாலணுகின்றதாய் முடியுமன்றோ? ஆனால் உயர்நிலையில் உள்ள உயிருளிகள் தொட்டும் உண்டும் ஆராய்கின்றன. குழந்தை யாதேனும் ஒரு பொருளைக் கண்டால் அதனைக் கையால் பலமுறையும் தொட்டுப்பார்த்துப் பின் வாயிலிட்டுச் சுவைப்பதனைக் காண்க. குரங்குகளிடத்து இவ்விடுப்பு விளங்குவதை ஆப்பசைத்த குரங்கின்கதை நன்கு விளக்குகின்றது. இவ்விடுப்பு ஆராய்ச்சியாக மக்களிடை விளங்குவதால் அன்றோ நூல்கள் பல எழுகின்றன.

அருவருப்பு - வெறுப்பு—நேர்வாளம் முதலியவற்றைக் கண்டாலும், அவற்றின் நாற்றம் பட்டாலும் ஒக்காளம் வருகின்றது. கண்ணைமூடி முகத்தை இறுகக் குறுக்குகின்றோம். ஏதோ ஒரு பொருளைத் தள்ளுவதுபோலக் கையை முன்னுக்குவீசுகின்றோம், குடர் முறுக்குகின்றது. இனித் தவளை பல்லி பாம்பு முதலியவற்றின் தோலைக் கண்டால் உடல் கூசுகின்றது. எட்டிநின்று கண்ணை மூடுகின்றோம். உடலைக் குறுக்குகின்றோம். பொரிப் பொரியாயும் உலர்ந்தது போலவும் உள்ள தோலினைக் கண்டால் உடல்கூசுகின்றது. இவ்வுடற்கூச்சமும் ஒக்காளமுமே அருவருப்பு என்ற இயற்கைச் செயனிலையாம். இதற்கேற்ற மெய்ப்பாடும் அருவருப்பு என்றே பெயர்பெறுகின்றது. ஆனால் அதனை நாம் 'வெறுப்பு' என வேறுபடுத்தி வழங்குவோம். இதனை, பிறர்பால் தோன்றும் இளிவரல் எனினும் அமையும்; முனி எனினும் ஒக்கும்.

குளவிகளில் சில ஓரே இனத்தைச் சார்ந்த உயிருளிகளை மட்டும் தீனியாகக் கொள்வதனைக் கண்டோம். சிலந்தியே தின்னும் சில, எரிப்புழுவே தின்னுஞ் சில இவ்வாறு அவற்றின் உணவுநாடும் இயற்கைச்செயனிலை சிறப்புநிலையுற்றுக் கிடக்கின்றது. ஆகையால், அவை, 'இவ்வுணவு நல்லதா, அவ்வுணவு நல்லதா?' என்று ஆராயவேண்டுவதில்லை. ஆனால், உயர்நிலையிலுள்ள உயிருளிகளிடை இவ்வுணவுநாடும் இயற்கைச்செயனிலை அவ்வாறு சிறப்பு நிலையுறாது பொதுநிலையுற்றுக் காணப்படுகின்றது "இந்த உணவே கொள்ளவேண்டும்" என்ற இன்றியமையாமை இல்லை; எந்த உணவையேனும் உட்கொள்ளுகின்றன மக்கள் உட்கொள்ளாத பொருளும்உண்டோ? இவ்வாறு உணவுநாட்டம் பொதுநிலையுற்றபோது உணவாராய்ச்சிக்கு அருவருப்பு என்ற இயற்கைச்செயனிலை இன்றியமையாது வேண்டப்படுகின்றது. உடம்பிற்கு ஆகாத கடுவும் நஞ்சும் பிறவும் கண்டு அவற்றின் நாற்றத்தின் வாயிலாக உணர்ந்து அருவருத்து நிற்கின்றோம்.

அச்சம் எழுந்தபோது அச்சப்பொருளைக் கண்டு அதைவிட்டு ஓடிவிட முயல்கின்றோம். ஆனால் அருவருப்பு நிகழும்போது வெறுப்புப்பொருளை அப்புறப்படுத்த முயல்கின்றோம்.

ஓடி ஒளித்தல் - அச்சம். மற்றைய இயற்கைச் செயனிலைகளை மாற்றித் தானேயாய் எழும் மெய்ப்பாடு அச்சமாகும். உயிர்க்காப்பிற்கு இன்றியமையாததொன்றாதலின் இம்மெய்ப்பாடும் மிகவலிவுடையதொன்றாகும். குழிமுயல் ஆடு சுண்டெலி முதலியவை அச்சமே வடிவானவை. அவற்றினிடம் குண்டிக்காய்க்கழலை மிகச் சிறத்திருக்கும் எனக் கண்டோம். வெகுளியில் காணப்படும் உடனிலைக்கும் அச்சத்தில் காணப்படும் உடனிலைக்கும் ஒற்றுமை பெரிதுமுண்டு. பகை எதிர்ந்தபோது, ஒன்று அதனைத் தாக்குதல் வேண்டும், அல்லது அதனின்றும் தப்பி ஓடுதல் வேண்டும். ஓடவேண்டுமானாலும் ஆற்றல் மிகுதியும் வேண்டப்படுமன்றோ? ஆனால் குண்டிக்காய்க்கழலை சிறத்திருத்தலினால் அச்சமெழுந்தபோது மறநிலை வளர்வதில்லைபோலும்.

அச்சம் பெருவலி யுடையதன்றோ. ஓரிளைஞன் காட்டிலே பாழடைந்த வீட்டின்வழியாகப் போகின்றான்; புலியைக் காண்கிறான். அஞ்சித் திரும்புகின்றான். எதிரே ஐந்தடிஉயரமுள்ள குட்டிச்சுவரொன்று காண்கின்றான். ஏதும் எண்ணாது அதனைத் தாண்டிக் குதித்தோடுகின்றான். அச்சப்பொருள் எதிரில்லாதபோது பின்னொருநாள் வந்து அச்சுவரைத் தாண்ட முயன்றபோது தாண்டமுடியவில்லை. மூன்றடிச்சுவரையும் தாண்டமுடியாது தயங்குகின்றான். எனவே அச்சநிலையில் நம்மையும் அறியாமல் ஆற்றல் மிகுகின்றது, என்பதாயிற்று. சிலபோது ஆற்றல் மிகுதியால் உயிருளி நடுங்கிச் சாகவும் காண்கின்றோம்.

அச்சம் எழுந்தபோது அச்சப்பொருளை வியந்து பார்க்கின்றோம். விடுப்பே எழுகின்றது போலும். கண்ணும் காதும் விழிப்படைகின்றன. கண்ணையும் வாயையும் அகலத் திறக்கின்றோம். நெற்றியை மேலே தூக்குகின்றோம். முதலில் அசைவற்று மூச்சற்றுக் கருங்கல் வடிவம்போல நிற்கின்றோம். அல்லது பிறர் பாராதபடி கீழ்ப்பதுங்கித் தவழ்கின்றோம். குருதி ஈரல் விரைந்து மும்முரமாகத் துடிக்கின்றது; விலாவில் இடிக்கின்றது. ஆனால் அதன் பயனாக உடல் முழுதும் குருதி பாய்கின்றதா என்பதே ஐயம். நமது தோல் வெளுத்துப்போகின்றதால் இவ்வையம் எழுகின்றது. தோலில் பாயும் குருதிக்குழைகள் குறுகிக் கொள்வதால் தோல் வெளுத்துப் போகின்றது போலும். தானே இயங்கும் நரம்பின் அமைப்பிற்கும் தோலுக்கும் தொடர்புண்டு ஆதலின் மெய்ப்பாடெழுந்தபோது இவ்வாறெல்லாம் நிகழ்கின்றது என்க. மயிர்க்கால்கள் கிளர்ச்சியுறுவதால் மயிர்க்கூச்செறிந்து நிற்கின்றோம். தோலில் உள்ள வேர்வைக் கழலைகளும் கிளர்ச்சியுறுவதால் வேர்வை கொட்டுகின்றது. குருதிக்குழைகள் குறுகியபோது அரும்புகின்ற வேர்வையாதலின் தண்ணென்றிருக்கின்றது. பொதுவாக வெளிச்சூட்டின் மிகுதியினால் தோல் சூடுண்டபோது வேர்வை யரும்பும். ஆனால் அச்சநிலையிலோ உடல் குளிர்ந்து தண்ணென்றிருக்கின்றது. இருந்தும் வேர்வை யரும்புவதுதான் இங்குச் சிறப்பியல்பு. தானே யியங்கும் நரம்பமைப்பானது, தோலோடு தொடர்புபட்டிருப்பதனால், அந்நரம்பமைப்புக் கிளர்ச்சியுற்றபோது வேர்வைக் கழலை முதலியவும் கிளர்ச்சியுறுகின்றன. தோலுக்கருகே மேலாகக் கிடக்கும் தசைநார்கள் துடிக்கின்றன. வாயில் எச்சில் ஊறுவதில்லை. நாவற்றிப் போவதில்லை. தீங்கிழைத்தவனைக் கண்டுபிடிப்பதற்காக அவன் வாயில் அரிசியை யிட்டால், அவன்மெல்லும்பொது அச்சத்தின் மிகுதியினால், உமிழ்நீர் ஊறாது. ஆகையால், அவன் மென்றஅரிசி உலர்ந்தே கிடக்கும்; அது கண்டு துப்பறிதல் எளிது. நம் நாட்டிலும் பிறநாட்டிலும் பழையநாளைய மக்கள் இவ்வாறு துப்பறிவதைக் காண்கின்றோம். நாக்கு வற்றிப்போனபோது வாயை அடிக்கடி திறந்துதிறந்து மூடுகின்றோம். சிறிதளவாக அச்சம் எழுந்தபோது கொட்டாவி விடுகின்றோம். அச்சநிலையில் விரைவாக மூச்சுவிடுகின்றோம். உடல் தசைநார்கள் முழுதும் துடிக்கத் தொடங்குகின்றன. முதன்முதலில் வாயிதழ்தான் துடிக்கின்றது. இதனாலும் நாக்கு வற்றிப்போதலாலும் குரல் தடுமாறுகின்றது. பேச்சும் வருவதில்லை அல்லது தட்டித்தட்டிப் பேசுகின்றோம். பேரச்சமாகப் பெருகியபோது பலவகையான மாறுதல்கள் காணப்படுகின்றன. குருதிஈரல் துடிக்கின்றது, அல்லது ஓய்ந்து நின்றுவிடுகின்றது. மயக்கமாக விழுந்துவிடுகின்றோம் இறந்தவன் முகம்போல முகம் வெளுத்துப் போகின்றது. மூச்சும் தடைபடுகின்றது. மூக்கும் அகலமாகின்றது. தாடையும் வாயிதழும் துடிதுடித்துத் தடுமாறுகின்றன. பிதுங்கிய கண்கள் இமையாதுபார்க்கின்றன, அல்லதுதாமே அப்புறமும் இப்புறமும் வளா புரள்கின்றன. கண்பாவை அகலமாகின்றது. தசைநார்கள் இறுகிவிடுகின்றன? அல்லது துடிதுடிக்கின்றன. இழுப்பு (இசிவு) வந்ததுபோலத் தோன்றுகின்றது. கையை இறுகிக் குவிக்கின்றோம்; பின் திறக்கின்றோம். அடுத்தடுத்துப் பன்முறையும் இவ்வாறு செய்கின்றோம். கையை ஓங்கி அகல எறிகின்றோம். ஓட்டம் பிடிக்கின்றோம். இவ்வாறு அச்சநிலையை ஓவியமெழுதிக் காட்டுகின்றார் டார்வின் (Darwin) என்ற பெரியார்.

குருதி யீரல் துடித்தல், துடியாது நின்றுவிடுதல் என்ற முரண்பட்ட செய்கைகள் நிகழ்வதைக் காண்கின்றோம். அச்சநிலையில் ஓடுதலோடு ஒளித்தலும் நிகழ்கின்றது. அச்சப்பொருளைக் கண்டபோது தப்பிப் பிழைக்க ஓடுகின்ற ஒரு விலங்கு மறைவிடம் கண்டால் அங்கே பதுங்கி ஒளித்துக்கொள்கின்றது. இதுபற்றியே இவ்வியற்கைச் செயனிலையை ஓடிஒளித்தல் என இக் கட்டுரையில் வழங்குகின்றோம். சிறுகுழந்தைகள் அச்சத்தால் தலையைத் துணிக்குள் வைத்துக்கொள்வதை நாம் காணவில்லையா? நாமும் இடிகேட்டவுடன் போர்வையை இறுகப் போர்த்துத் தலையை மூடிக்கொள்கின்றோமன்றோ. நெருப்புக்கோழி (Ostrich) அஞ்சி ஓடுமாம், பின்னர் ஓட முடியாமற்போனால் தலையை மண்ணிற்குள் புதைத்துக் கொள்ளுமாம். எனவே இவ்வியற்கைச்செயனிலையில் இரண்டு நிலைகளைக் காண்கிறோம். ஒன்று ஓடுதல்; மற்றொன்று ஒளித்தல். குருதியீரல் துடித்தல் ஓடும் நிலையில் எழுவது; குருதியீரல் துடியாது நின்றுவிடுதல் ஒளிக்கும் நிலையில் எழுவது. இவ்வாறே மற்றைய முரண்பட்ட செய்கைகளையும் அமைத்துக் கொள்க. ஓடுதற்கும் ஒளித்தற்கும் முடியாதபடி சிலபொழுது அச்சநிலையில் நடுங்கிச் சாகின்றோம். அஃதேன்? ஓடமுடியாதபோது மனத்தெழும் குழப்பத்தால் ஒன்றும் செய்ய வகையறியாது பல தசைநார்களும் துடிக்கின்றன. ஈதே நடுக்கம். ஓட முடியும்போது இந்நடுக்கம் எழுவதில்லை. ஓடிப்பிழைத்தலே இதன் முடிவாதலின் நடைப்பொறிகளாகிய கால்களே பெரிதும் இந்நிலையில் கிளர்ச்சியுறுகின்றன.

இவ் வியற்கைச்செயனிலையில் பல பூட்டுக்கள் இருக்கின்றன. அவ்வவற்றிற் கேற்ற திறவுகோல் கொண்டு திறத்தல் வேண்டும். திடீரென்று தோன்றும் பேரொலி கேட்டுத் திடுக்கிட்டு நடுங்கித் தூக்கிப் போட்டாற்போல் அஞ்சுதலைச் சிறுகுழவியிடமும் காண்கிறோம். இடிகேட்டு நாமும் நடுங்குகின்றோம். புயற்காற்றின் பேரொலி கேட்டுக் கல்வீட்டில் காவலோடிருக்கும் நாமும் அஞ்சுகிறோம். திடீர் என நிகழும் நிலைமாற்றத்தினாலும் (loss of equilibrium) குழந்தை அஞ்சுகின்றது. மாடியிலிருந்து படிவழியாக இறங்கி வரும்போது, குழந்தையைச் சிறுகக் கைநெகிழ விடுவதுபோலக் காட்டினால், குழந்தை அஞ்சுகின்றது. யாதேனும் ஒருபொருள் திடீர் என நம்மெதிரே அசைந்தால் அச்சமெழுகின்றது. மெல்லிய அவலக்குரல் கேட்டபோதும் சில பறவைகள் அஞ்சிநடுங்குகின்றன. நாற்றத்தின் வாயிலாகக் கேடுநிலையுணர்ந்து அஞ்சுகின்ற விலங்குகளும் உள்ளன. புலி முதலியவற்றின் நாற்றமுணர்ந்து மாடு முதலியன அஞ்சுதல் காண்க. உடல்நோயும் அச்சத்தை விளைக்கின்றது. வெகுண்டெழுந்த உயிருளிகள் பகையின்மேல் பாய்ந்து அறைவதும் கடிப்பதும் செய்வது எதுபற்றி? அவற்றிற்கு அச்சத்தை எழுப்பவே யாகும். இன்று நாயாற் கடியுண்ட குழந்தை நாளை அந்நாய்க்கு அஞ்சி நடுங்குகின்றது நோயினை எதிர்பார்த்தலும் நோய்வாய்ப்படலும் நமக்கு மிகுந்த அச்சம் உண்டாக்குகின்றது. நாம் முன்னறியாத புதுமை உணர்வரிதாய் நின்றபோதும் அச்சம் எழுகின்றது எங்கும் பேயைக் காண்பது உணர்வரிதாம் இப்புதுமையால் அன்றோ? குழந்தையொன்று ஒரு வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கின்றது. சுண்டெலியொன்று திடீர் எனக் குதித்து மறைகின்றது தான் கூடிவிளையாடும் சுண்டெலி என்றுணராமல் அக்குழந்தை அஞ்சி நடுங்குகின்றது. இவ்வாறு பல வகையாலும் அச்சநிலை செயலுறுகின்றதென்க.

ஒட்டக்கூத்தர் பாடிய **தக்கயாகப் பரணி** மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.

(உரையுடன்)

இதுவரையில் அச்சேறாத இவ்வரியநூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.

விலாசம் :—கலாநிலயம் : 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[312-வது பக்கத் தொடர்ச்சி]

முதல்பத்து மூன்றும்பதிகம்.

8ம்-பாசுரம்.

நாளும் நின்றடும் நம்பழமை அங்கொடு வினையுடனே
மாளும்ஓர் குறைவில்லை மனனக மலமறக் கழுவி
நாளும் நம்திருவுடைய யடிகள்தம் நலங்கழல்வணங்கி
மாளும் ஓரிடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே.

குறிப்புகள்:—வணங்கி - வணங்கு என்ற அர்த்தத்தில் வந்தது. அம் கொடுவினைகள் - அழகிய கொடுமையான வினைகள்-கொடுமையில் அழகாவது, நல்லபாம்பு என்றாற்போல் வெகுகெடுதி யென்ற பொருள். மனத்தின் மலமாவது - உலக விஷயங்களில் பற்று. கழுவுதலாவது - நீக்குதல்.

பொழிப்புரை - மேற்பாட்டில் சொல்லியபடி நம் திருவுடைய பகவானைச் சுவயம் பிரயோஜனமாய் வணங்குக. அங்ஙனம் செய்யவே, நாள்தோறும் இடைவிடாது நம்மை மோஹிப்பித்துக் கெடுக்கும் பழம் வினைகளெல்லாம் தொலையும். அதற்குமேலே நமக்கு ஒருநாளும் குறைவு இல்லை. நம்மிஷ்டம் எல்லாம் கைகூடும். பகவானைப் பக்தியோடு ஆச்ரயிக்கலாம். உயிர்விட்டு இறக்கும் காலத்திலும் அவனை வணங்குவது மற்ற எல்லாவற்றிலும் உத்தமம்

தத்துவக் குறிப்பு:—வேதாந்திகள் கர்மபந்தங்களை மூன்றுவிதம் பிரித்துக் கூறுவார்கள். 1 ஆகாமி, 2 சஞ்சிதம் 3 பிராரப்தம். "ஆகாமி" என்றால் இனி நம்மை நற்பயனுக்கோ கெட்ட அநுபவத்திற்கோ உட்படுத்தக் காத்திருப்பது. 2 சஞ்சிதம் - பழைய கர்மங்கள் தம் பயனை அளிக்கவரிசையாகச் சேர்ந்து ஆள்படுத்த நிலை நிற்பது. (3) "பிராரப்தம்"—நம்மைக் கர்மங்களின் பயனாகத் தற்காலம் வசப்படுத்திப் பலங்களைக்கொடுத்துக்கொண்டிருப்பது. பிராரப்தத்தை விலக்கி நம்மை அளிக்க ஈசனாலும் முடியாதென்று வேதாந்திகள் எண்ணுகின்றார்கள். இதற்குக் காரணம் - வஸ்துக்களுக்கு ஏற்கனவே ஈசன் அளித்த குணங்களை மாற்ற அவனாலும் இயலாது. அவனது ஆக்ஞைக்கும் அவன் நியமித்துள்ள "நியதி"க்கும் பங்கம் வரும். ஆகையால், இப்பாசுரத்தில பாபங்கள் கெடும் என்று சொன்னது "ஆகாமி", "சஞ்சிதம்" என்னும் இவ்விரண்டையும், மாத்திரமே. உயிர் விடும் காலத்திலாவது "வணங்குவது", "வலம்" என்று சிரேஷ்டமாகக் கூறியது, பக்தியோகத்தின் பெருமைப்பாடு பற்றியாம்.

மேல் சொன்ன வணக்கம் - மனஸால் நினைத்தல் - கையால் கூப்பல்-வாக்கால் அவன் திருநாமத்தை உச்சரித்தல்—ஆய இவை வெகு ஸங்கிரஹமாயும் எளிதிலும் உயிர் துறக்கும்போதும் செய்யக்கூடிய வினைகள். முன் பத்தில், ஒன்பதாம்பாசுரத்தில் "ஒடுங்க வவன் கண் ஒடுங்கலு மெல்லாம் விடும்" என்று ஏற்கனவே பாபவிமோசனம் சொல்லியிருக்க, இந்தப் பாசுரத்தில் கூறுவது புனருக்தியன்றோ என்னாது, இப்பாசுரம் அனிஷ்டநிவர்த்தி மாத்திரமேயன்றி இஷ்டபிராப்தியாய்ப் பகவத்தனுபவத்திற்குரிய பக்தியோகம் நிலைபெறும் என்ற தாத்பரியத்தில் வந்ததென் றறிக.

9-ம் பாசுரம்.

வலத்தனன் திரிபுர மெரித்த
வனிடம் பெறத்துந்தித்
தலத்தெழு திசைமுகன் படைத்தநல்
லுலகமுந் தானும்
புலப்படப் பின்னும்தன் னுலகத்தில்
கத்தனன் தானே
சொலப்புகி லிவைபின்னும் வயிற்றுள
விவையவன் துயக்கே.

பொருள்:—"திரிபுரம் எரித்தவன் இடம் பெற வலத்தனன்"—எம்பெருமான் பரமசிவனைத் தனது வலதுபக்கத்தில் விசாலமாக வீற்றிருக்கச்செய்து பக்தர்களுக்கு ஸேவை ஸாதித்துளார் அர்ச்சுனனுக்குக் காட்டிய விச்வரூபத்திலும் ஏகாதசருத்திரர்களையும் தன் வலபக்கத்தில் காணக் கிருஷ்ணபகவான் ஸேவை ஸாதித்தாரென்று பகவத்கீதையில் படிக்கிறோம்

"உந்தித்தலத்து எழுதிசை முகன்" - எம்பெருமானுடைய நாபிக் கமலத்தில் (எழு) பிரசித்தமான நான்முகனைத் தரித்துளார். "படைத்த நல்லுலகமும் தானும் புலப்பட"—நான்முகன் படைத்த உலகம் நன்றே; ஏனென்றால் அநேகர் பக்தியோகத்தால் எம்பெருமான் கிருபைகொண்டு நற்கதியை யடைய இப் பிறப்பு உதவுகிறபடியால் தானே!

"தானும் புலப்பட"— மனிதனாகின்ற அவதார விசேஷங்களில் எம்பெருமானே கர்மவசமன்றிச் தன்னிச்சையால் ஜந்மம் எடுக்கிறான்; இங்ஙனம் அவன் இழிவது பக்தர்களை அளிக்க அவன் கிருபை செய்யவே. "சொல்லப்புகில் பின்னும் வயிற்றுள" விஸ்தாரமாய்ச் சொல்லப்புகில், அவனுடையஸௌலப்பிய குணங்கள் (வயிற்றுள) ஆழ்ந்து எத்தனையோ அளவில்லாமல் அகத்தில் கிடக்கின்றன.

"இவை யவன் துயக்கே"—இம்மஹா குணங்களெல்லாம் வியக்கத்தக்கன, அறியத்தகாதன. சந்தேகப்பட்டு விபரீதமாய் நினைக்கக் கூடியனவாகிய கருத்துக்களே.

துயக்கு-சம்சயம் - மோஹத்திற்கும் உபலக்ஷணம்.

குறிப்பு :—ஆழ்வார், பகவான் பிரம்மருத்திரர்களுக்கும் தாழ்கிறான் என்றும், நம்போல் மானிடருக்கும் புலப்பட மனிதனாய் அவதரித்து ஸஜாதியனாய்ப் பிறந்துபக்திசெய்யச் சுலபனாகிறானென்றும், சொல்லி நிறுத்தாமல், "இவை எல்லாம் அவன் துயக்கே" என்று ஏன் கூறவேண்டுமென்றால் - உலகத்தார் எல்லாருக்கும் ஒன்றுபோலே அவன் தென்பட்டு எல்லாரையும் பக்திமான்களாக ஆக்கக் கூடாதோ? சிற்சிலருக்கு மாத்திரம் உதவி செய்து பெரும்பாலரை உபேக்ஷித்து விடுவதின் காரணம், அவன்பக்கல் மனம் பரிபக்குவமில்லாதவர்கள் தன்னை அறியவொட்டாதபடி மயக்கிவிடுகிறான். அவர்கள் ஞானத்தில் ஐயம்

திரிபுமோகம்குடிகொள்ளுகிறபடியால் அறியமாட்டாதவர்களாகிறார்கள். முதல்பாசுரத்தின் தாத்பரியமே இந்தத் தசகத்தில் பலவாறாகக் கற்பிக்கப்படுவதை ஊன்றிப் படிப்பவர்கள் அறிவார்கள்.

10-ம் பாசுரம்.

துயக்கறு மதியில்நன் ஞானத்து ளமரரைத் துய்க்கு
மயக்குடை மாயைகள் வானிலும் பெரியன வல்லன்
புயற்கரு நிறத்தனன் பெருநிலம் கடந்தநல் லடிப்
[போது
அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் வணங்குவன்
[அமர்ந்தே

அவதாரிகை:— இதுவரையில் பரோபதேசம் செய்துவந்த ஆழ்வார் தம் மனோநிலையில் காணும் அநுபவத்தை நமக்குரைக்கின்றார்.

பதவுரை.

துயக்கறுமதியில் - களங்கமில்லாத புத்தியல், நன் ஞானத்துள்-நல்ல ஞானத்தையுடையரான, அமரரை-தேவர்களையும் கூட, துயக்கும்-மோஹிப்பிக்கும், மயக்குடை மாயைகள் - மயக்கமுடைய ஆச்சரிய சக்திகள், வானிலும் பெரிய - வெகுபெரிதான, வல்லன்-சுவயசக்தியுள்ளவன். புயல்கரு நிறத்தனன் - நீலமேக நிறமுடையவன். பெருநிலம் கடந்த நல் அடிப்போது-விசாலமான மூன்று லோகங்களையும் திருவிக்கிரம அவதாரத்தில் அளந்த திவ்விய திருவடிமலர்களில், அமர்ந்து - ஊன்றி, அயர்ப்பிலன் - யான் ஒருகாலும் மறவாதவன், அலற்றுவன் - கிரமம் வரிசை இவைகளைக்கருதாமல் வாய்க்கு வந்தபடி அவனையே துதி செய்வேன். தழுவுவன்-கட்டிக்கொள்வேன். வணங்குவன் - தலையாலும் தேகத்தாலும் பலவிதமாய் நமஸ்காரம் செய்வேன்.

11-ம் பாசுரம்.

அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்தவன்
[தன்னை
அமர்பொழில் வளங்குரு கூர்ச்சட கோபன்
[குற்றேவல்கள்
அமர்சுவை யாயிரத்து அவற்றினுள் இவைபத்தும்
[வல்லார்
அமரரோடு உயர்விற்சென்று அறுவர்தம்பிறவியஞ்
[சிறையே

பொழிப்புரை :—அண்டத்தின் மத்தியில் தோன்றித் தேவர்களுக்காக அவர் தொழ அமிர்தத்தை அளிக்கக் கடலைகடைந்த எம்பெருமான் தன்னை, உத்தியானங்கள்நிறைந்தகுருகூர்ச்சடகோபன் அந்தரங்க கைங்கரியரூபமாக இயற்றிய இவ்வாயிரம் பிரபந்தத்துள் இந்தப் பத்தைச் சேவிப்பவர்கள் நித்தியசூரிகளுடன் பரமபதத்தில் சென்று வீற்றிருந்து அதன் பிறகு ஜந்மம் எடுக்கிற அநாதி குரூரமான பாபங்களை நீக்கிக் கொள்வார்கள்.

குறிப்பு:—அம்சிறை - அழகியதான காராகிரஹம்-குரூரமான பலபிறப்பு என்று தாத்பரியம்.

இந்தத் தசகத்தில் இனிய முழுத்தமிழ்ச் சொல்லாலேயே ஆழ்வார் ஆழ்ந்த பொருளைப் போதித்திருப்பதைப் படிப்பவர்கள் கண்டுகொள்வார்கள். கவனிக்க வேண்டிய நுண்பொருள் ஒன்றை எடுத்துக் காட்டி இத்தசகத்தின் உரையை முடிப்போம். "பகவானை ஆச்ரயிக்காமல் வயது மூப்பு பசி பிணி இவைகளால் வெகுகாலம் சென்றுவிட்டதே என்று ஒருவரும் கலங்காமல் இறக்கும்போதாகிலும் வணங்கலாமென்பதைத் தெரிவிக்க, "பத்துடைய அடியவர்க்கு அவன் பரம சுலபன், அறிந்து கொள்ளுங்கோள்" என்கிறார்.

இலஞ்சிப் பாவை.

[314-வது பக்கத் தொடர்ச்சி]

18910

13. சிறைப்பட்ட சிற்றிடையாள்.

கொண்டா னுயர்தேர் மிசைகோல் வளையாள்
கண்டா டனதா ருயிர்கண் டிலளால்
மண்டா னுருமின் னின்மயங் கினளால்
விண்டான் வழியா விரைவா னெழுவான்.

கம்பர்.

மனிதன், குழவியாய்ப் பிறக்கும்நாளில் மாதாவிற்குத் துன்பம்; நோயடையின் எவர்க்குந் துன்பம்; வியன்பருவத்துத் தன் செயலால் அவன் அடையுந் துயருக்கோ அளவே யில்லை. இவ்வாறு, பிறந்தநாள் முதல் இறக்கும்நாள்வரை உலகில் மனிதன் அடைவது துயரே. என்றும் இருளேபொதிந்தவிவ் வுலகத்தின் வடகோடிமுனையிலும் தென்கோடிமுனையிலும் அவ்வப்போது தோன்றும் மின்மினிக் கூட்டங்கள் போல் மனிதவாழ்க்கையில் இன்பமென மிளிர்ந்து மறையும், நிகழ்ச்சிகள்சில வுளவாயினும், அவையாவும் பொதுவில், மனிதனுக்குரிய இடும்பையை எடுத்துக் காட்ட ஏற்பட்டவைகளே. வீதியில் உலவும் எவனை வினவினும் அவன், நவை நீங்கிய முழுமகிழ்ச்சியோடு இருக்கவோ காண்பதரிது. செல்வ மின்மையாலோ சுகக் குறைவாலோ, மன நோயினாலோ அல்லலுறுவார் கூட்டமே செறிந்துள திவ்வுலகம். சமனுற நிறுத்திய துலாக்கோல்போல், துயர்பெய்த தாலமே தாழாவகை சிற்சில பரிசில்கள் மறுதட்டில் எறியப்பட்டுக் கிடக்கின்றன.

தன்னியல்பாய்க் களித்துப்பாடிக் காட்டில் திரியும் பறவையென உலகினி லுலவிய விஜயன், வியன்பருவத்து, சுதஞ்சனையெனுமிச் சுந்தரியின் காமர் கண்ணினை கண்டுநைந் தடைந்ததோர் துன்பப்பொதியினைச்சுமக்கலாற்றாத் தளர்வோடு மெல்லெலன நடந்து செல்லலாயினன். நடுப்பகலுமாய், உச்சிவேளையும், பருப்பதச் சிகரங்களில் உறங்கிக்கொண் டிருந்தது.

சரேலென அப்போது, மரீசியாய வழிகாட்டி வாயங்காத்துப் பெருங்குரல்பாய்ச்சிக் கூகூ வென்று கூவினன். தானுற்றிருந்த பேதுறவால் புறத்துணர்வற்றுக் கிடந்த விஜயன் திடுக்கிட்டு 'என்னடா சைகை செய்கிருய்?' என்னலு மவன் 'அதோ நல்லுணவுண்ணும் அக்காகத்தை ஓட்டுகின்றேன்' என்று விடை பகர்ந்தான். அவன் குறித்த திசைநோக்கிய விஜயனுக்கு இறந்த தன் குதிரையின் உடலைக் கொத்தும் காகமொன்று கண்ணிற்பட்டது. படலும், "அந்தோ என்னருமைப் புரவீ! இம்மலைநாட்டை மிதித்திலமேல் நாமிருவரும் நன்மையோடிருந் திருப்போம். நீயோ துயர்நீத்து நல்லுலகம் சேர்ந்து விட்டாய்; உனக்கிரங்கவும் ஒருவன் யான் இருக்கின்றேன்! தொலையாத் துன்பமுடைய எனக் கிரங்கவோ ஒருவருமில்லை. செல்வம் படைத்தும், உறவினரைப் பெற்றும், நண்பர்கள் நயந்துமுள்ள எனக்கு அந்தரங்கத்தில் என் மகிழ்வுகண்டுவக்கவும் துயர்கண்டு பரிவுகூரவும் ஒரு துணை பெற்றிலேன். மனிதவாழ்க்கை என்ன வாழ்க்கை! உலகமே ஓர் நாடக அரங்காகவும் மனிதர் அதிலாடும் நடிகர்களாகவும் உயர்கவி ஷேக்ஸ்பியர் உருவகப் படுத்தியது உண்மையேனும்,மனிதன் என்றைக்கும் தன்னகத்துறை துயரை மறைத்தோ-அதை மறைக்கவோ-மாறுவேடம் பூண்டு நடிக்கிறன். உலகை வெறுத்து மனிதன் தானே இறக்கவேண்டுமென்றவிருப்பினுல் மடிகிருனேயன்றி,மேலுறு கிழத்தன்மை,மற்று அவனை யென்செய்யும்?" என்றுபுலம்பி வழிகாட்டியை நோக்கி, 'அடே, நீ என்முன் செல். வாயை மூடிநட; பாடினுலும், கூவினுலும், உரக்கப் பேசினுலும்—ஏதொரு சிற்ருெலி செய்தாலும் இறப்பாய், நட!' என்று விதித்தனன். முன் பின்னய் இருவரும் நெடுநேரம் வாய்திறவாமல் நடந்து சென்றனர்.

செங்குத்தான குன்றினைச் சுற்றிச் செல்லுமொரு சிறு பாதையைக் கடந்து அவர்கள் போகும்போது, பாதையை அடுத்திருந்த பாறையொன்றின்மேல், மழையிலூறி வெய்யிலிற் காய்ந்து காற்றிலுலர்ந்து திரைந்த யாக்கையையுடைய ஓர் பெண்ணுருவம், பீறற்சீலை பல ஒழுங்கின்றி உடலின்மேல் உடுத்து நிற்கக் கண்டார். அவள் நாற்புறமும் தன் நாட்டத்தைச் செலுத்திக் காட்டையும் பாறையையும்பார்த்ததுடன், வானத்தையும் அண்ணந்து நோக்கி நோக்கி, எதனையும் ஊன்றிப் பார்க்குங் கருத்திலளாய் அனைத்தையும் ஐயுறவோடு கண்டு நின்ற கோலம் தோன்றிற்று. தலையில் தூசுக்கோல்களையே தூமணி மகுடமாய்த் தாங்கி, கழுகுகள் நீத்த சிறகுகளை, ஆடுகளும் அடிவைக்க இடமில்லாத அடுக்கலில் தேடிச் சேர்த்து, கையிற் கற்றையாய்ப் பற்றி அவள் ஆகாயத்தில் அலைத்துநின்றது, அந்தரத்தில் வாயுவோடு வாதமிட்ட தொத்தது. மலைநாட்டானது தலைப்பாகையைக் கண்டவுடன், கல்லும் குகைகளும் எதிரொலிகறங்கக் கூக்குர லிட்டாளேனும், அவன் பின்னே வந்த தென்னட்டானைத் தெரிந்துகொண்டபோது கெக்கலிகொட்டி நகைத்தாள். உடனே கைகளைப் பிசைந்துபிசைந்து ஐயையோ என்று கண்ணீர் வாரநின்று சில பாட்டுக்களைப் பாடினள். இளமையில் அவள் குரல் மிகவும் இனிமையாயிருந்திருக்கும்; இக்காலத்தும் அது, இசை நிறைந்து, ஆரஞருற்ற விஜயனுக்கு அமைதியை உண்டாக்கிற்று. இரக்கங்கொண்ட அவனும் அவளை யணுகி "அம்மா நீயார், இவ்விடம் என்ன செய்கிருய், என்னுற் செய்வது ஏதேனு முண்டோ?" என்று வினவினன். அருள் கொண்ட முகத்தைக்கண்டும் இரக்கம்நிறைந்த குரலைக்கேட்டும் பேதையவள் இறங்கிவந்து "ஐயா! நீரே கேளும். என்னைத் தூங்கு தூங்கு, உனக்கு மதி கெட்டுப்போய்விட்டது, என்கிருர்கள். எனக்கோ இந்த மலைநாட்டில் தூக்கம் வரவில்லை. அவர்கள் மொழியைப் பேசுதற்கோ நாவெழவில்லை. துக்க மிருந்தால் தூக்கம் எப்படி வரும்? அது தெரியவில்லையே அவர்களுக்கு! எனதுயிர்த் துணைவரை அடக்கஞ் செய்திருக்கும் என்நாட்டில் இருந்து, அங்கே ஓடுகின்ற அருவியின் தாலாட்டைக் கேட்பேனேல் அசைவின்றி அயர்ந்து ஓரே உறக்கமாய் உறங்கி என் அந்திக்காலத்தில் அரவமொன்றுஞ் செய்யாமல் அகன்று விடுவேன். முன்னே இப்படித்தான் கலியாணம் கலியாணம் என்ருர்கள். தலைநிறையப் பூக்களையெல்லாம் சூட்டினர்கள். பொழுதுவிடிந்ததும் மாப்பிள்ளை வருவார், கலியாணமாகும். என்ருர்கள். என்ன மோசம்! என்ன மோசம்! விடிந்தபின் மாப்பிள்ளையையும் காணேம் ஒன்றும் காணேம். என்ன என்பேன்.

(பாடுகிருள்)

மணமகனே பிணமகனய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார்வாழ்த்தொலிபோய் அழுமொலியாய்க்கழிய
யான் அழுதேன். ஐயா! நான் அழுதேன். விடிந்ததும் தொடர்ந்த துக்கம் இன்னும் விடியவில்லையே! நான் என்ன செய்வேன்!" என மாழ்கினள். இதனைக் கேட்ட விஜயன் மனங்கரைந்து, அறிவு சிதைந்து அரற்றிநின்ற அவளை நோக்கி, "அம்மா உன் ஊர் எது?" என்ருன். அதற்கவள்

எந்தவூ ரென்றீர் இருந்தவூர் நீர்கேளீர்
அந்தவூர் இன்று ஹஹஹஹா—நந்திப்போய்
முப்பாழும் பாழாய் முடிவிலொரு சூனியமாய்
அப்பாலும் பாழென் றறி.

என்ெருரு பாசுரம் பாடினள்.

எல்லாப் பித்தரையும்போல் பிதற்றலும் பொருளுங்கொண்ட இவள் மொழிகளைக் கேட்ட விஜயன் மரீசியை நோக்கி, "இவளார்? பாறையின் உச்சி முனையில் உட்கார்ந்து தன் துணையைக் காணது சிறகுகளையும் வாலையும் பரப்பிக் கத்துமொரு பருந்துபோல் தன் உடைகளை யலைத்துப் பாடும் இவள் மொழிகளின் பொருள் யாது? என்று வினவினன். "இவளா? இவள் மங்கையர்க்கரசி. இவள் ஒரு பைத்தியக்காரி. தென்னட்டிலே சென்று எமது தலைவர் சூறையாடியபோது அன்றுதான் மணம்புக்க இவளைச் சிறைசெய்து இங்கே கொண்டுவந்தார். அப்போதுதான் புதுமணம் புணர்ந்த இவள் கொழுநன் தனது ஆற்றலைத் தோற்றுவிக்கும்பொருட்டு, மதியிலியவன், எமது தலைவரோடு சண்டையிட, வாட்போரில் வல்ல அவர் ஓரே குத்தில் அவனைக் கொன்று இவளையும் சிறைகொண்டார். இவள் இயற்கையாய் வெளியில் உலவுவதில்லை. இன்றென்னவோ காவல் கடந்து வந்துவிட்டாள். ஏ! வெறி முண்டம்! போ வீட்டிற்கு" என்று உரப்பித் தன் வில்லால் அவளையடிக்க ஓங்கினன். அவளது வரலாற்றைக் கேட்கக் கொதித்தெழு முதிரம் பொங்கினனுய விஜயன்

அழன்று "அவளை அடித்தால் உன்னைக் குண்டுக்கட்டாய்த் தூக்கிப் பள்ளத்தில் எறிவேன்" என்று சீறினன்.

மங்கை:—ஆ! ஆ! அது சரி. அப்படிச் சொல். (அருகில்வந்து) இதோ பார். இந்தச் சிறகுகளை இப்பொழுது மன்மதன் அம்புகளென்ன ஆகாயத்தில் விடப்போகிறேன். அவைகள் சென்று என் நாயகனைச் சேரும். இதோ இந்தப்பாவிக்கு ஒன்றும் கொடேன். பாறைமேல் விழுந்து அழுகிய இவனது பிணத்தை ஓநாய்கள் பிடுங்கித் தின்னப்போகின்றன. அப்போது அவனது தலைப்பாகை கழன்று கல்லிற் சிக்கிச் சிகைவிரிந்தாடுங்கால் நரிகளை நல்விருந்திற்கு வாவென் றழைப்பது போன்றிருக்கும்.

விஜ:—உஸ், உஸ். சும்மா இரு, அம்மா, சும்மா இரு.

மங்:—(பாடுகிருள்) சும்மா சும்மா வருமோ சுகம்...

விஜ:—உஸ் உஸ்.

மங்:—நான் சொல்லவேண்டுமென்றில்லை. ஆனல் நீ சொல்வது நேரிதே", என்று சொல்லிப் பின் ஏதோ நன்னினைவு வந்தவள்போல் திடுக்கிட்டு, நாற்புறமும் சுற்றிப்பார்த்து, மரீசியை அச்சமொடு நோக்கி, விஜயனைப் பரிதவித்துப் பார்த்து, பள்ளத்தாக்குகளில் தன் கண்களை வைத்தவளாய்ப் பாடலுற்ருள்.

சூழ்ந்தனர் சூரர்கள் சுற்றுற வோர்குழி
ஆழ்ந்தன ரங்கோர் முளைநாட்டி—வீழ்ந்த
பெருங்களிறு தன்னைப் பிணிக்கவே யாங்கு
மருங்கொளித்து நின்ருர்கள் மற்று.

மருப்பிரண்டு கொண்ட மதவேழம் கானில்
செருக்கித் திரிந்தவப் போழ்து—கருத்தழியப்
பித்தடைந்து குத்துண் டுயிர்போம் பிடிகண்டு
கத்திக் கவன்றதே யாங்கு.

வேடுவர் வெங்கயத்தைக் கானகத்தி லெங்கெங்கும்
தேடுகின்று ரந்ததோ தெவ்வனத்தை—நாடும்
கரிதனக்குங் கண்ணுண்டு காணவே கால்தான்
இரிதற்கு முண்டென் றியம்பு.

சுதஞ்சனை விஜயனுக்குச் சொன்ன மொழிகள் வெம்பிய அவன் மனதில் வேரூன்றில. மரீசி கூவிய போது சற்றே ஐயங்கொண்டானேனும், அது தன் குதிரையின் நினைவாலகன்றது. மங்கையர்க்கரசியின் பாடல்கள் அவனது மயக்கத்தைத் தெளிவித்தன. உடனே ஆண்சிங்கமெனச் சீறி வாளையோங்கி 'உன் வஞ்சகத்தை வெளிப்படுத்தினல் பிழைப்பாய்! இல்லாவிடில் இறப்பாய்' என்ருன். இவனது சீற்றத்திற்கிலக்காகச் சிறிதும் மனங்கொள்ளா அவ்வழிகாட்டி மரீசி உடனே தாவியோட ஆரம்பித்தான். விஜயனுந் துரத்தினன். ஓடுகிறவர்களிருவரில் இருதிறத்தாரும் தங்களுயிர்க் கஞ்சி இதுவரையிலெங்கும் ஓடியிரார். தன்னுயிர்க்கு நடுங்கி மரீசியும், மாற்ருர் இருப்பிடமவன் சேர்ந்து விட்டால் தன்னுயிர்க் கிறுதி நேரிடுமென்று விஜயனும் விரைந்து ஒருவரை யொருவர் முந்தினர். மலைநாட்டான், ஓடும்போதே வில்லை வளைத்து அம்பொன்றை விஜயன்மேல் தொடுத்தான். விரைந்து பாய்ந்த அவ்வம்போ விஜயனை விட்டு விலகி மங்கையர்க்கரசியின் மார்பிற் குளித்தது.

இடும்பை - துன்பம். நவை - குற்றம். பேதுறவு - தடுமாறறம். பீறற்சீலை - கிழிந்த ஆடை. தூசுக்கோல் - துடைப்பம். அடுக்கல் - மலை. ஆரஞர் - மிகுந்த துன்பம். இரிதற்கு - ஓடி விடுவதற்கு. மாற்ருர் - பகைவர்.

ஆச்சரிய சூடாமணி

[316-வது பக்கத் தொடர்ச்சி.]

5. அசோகவன அங்கம்

சீதையும், கோடிப்பந்தரில் மறைந்திருந்த மண்டோதரியும் வேலைக்காரியும் வருதல்.

சீதை:—ஐயோ! அரக்கரின் கொடுமை என்னே!

மண்டோ:—(ஒருபுறமாய்) அடீ, இதோ மஹாராஜாவுமிருக்கின்ருர். நாம் நினைத்ததைப் பார்க்க நேரிட்டது.

ராவண:— (அருகிற் சென்று) தேவி!

சீதை:—பாவி, என்னசொல்லப் போகின்ருனே! என்செய்வேன்!

ராவண:—அழகியே. கங்கைநீராடி கற்பகமலர் புனைந்து நீ, கைலைமலையிலேனும் வனமிகு நந்தனவனத்திலேனுந் தவஞ்செய்தாலும் எய்துதற்கியலாத தெய்வஇன்ப மனுபவிப்பாய்! சுவர்க்க வாயிலைத் தாழ்கோல் தடுப்பதுபோல உன்கற்புத் தடுக்கின்றதே.

சீதை:—உன் வீட்டுநெறி நரகமே! என் ஒருதனி நாயக னுடன்வர நரகமும் நான் நயந்து நண்ணுவேன். உன்னேடு சேர்ந்தோ சுவர்க்கமும் புகேன்.

ராவண:—மாதே, நான் உன் காரணமாக அந்தப்புரப்பெண்களையும் தள்ளிவிடுகிறேன்.

மண்டோ:— (ஒருபுறமாய்) நினைத்துக் கொள்ளுங்கள். மஹாராஜனை தாங்கள் இப்பொழுது என்னையும் நினைத்துக் கொள்ளுங்கள்.

சீதை:—இல்லை; அந்தப்புரப்பெண்களை மட்டுமல்லாது, எனக்காக உன் உயிரையும் விடநேரிடும்.

மண்டோ:— (ஒருபுறமாய்) ஐயோ, மனிதர் கொடுஞ்சொற்கள் கூறுபவர்களே.

ராவண:—உண்மையே. மன்மதன் என்னுயிரைக் கவர்கின்ருன்.

சீதை:—இல்லை, இல்லை, மன்மதனல்லன்; மன்மதனிலும் அழகுவாய்ந்த என் கணவனே கொல்வான்.

ராவண:—(உரக்கச்சிரித்து) மலைச்சிற கரிந்த இந்திரனது குலிசத்தைத் தளிரைப்போல் மார்பிலேற்ற இராவணன் - சாதியில்மட்டும் க்ஷத்திரியனேனும் வேடுவத்தொழில் மேற்கொண்ட ராமனது ஆயுதங்களைப் போரில் தாங்கமாட்டானென்பது உண்மையே!

மண்டோ—(ஒருபுறமாய்) மஹாராஜா ஏதோசெய்யத் தொடங்குகின்ருரே. ஒன்றிற்கும் இவள் இணங்க மாட்டாள்.

ராவண:—தேவி, இதோ வணங்குகிறேன்—சுந்தரி, உனக்கு என்னிடம் அன்பிருக்குமானால், கந்தருவர் அசுரர் சாரணர் இயக்கர் நாகர் முதலான குலமாதர் குவிந்திருக்கும் என் அந்தப்புரமும் மற்றும் எல்லாப் பொருள்களும் உன்னடிமை யாகும்.

மண்டோ:—இவளுக்கு நான் இதையுஞ் செய்வேன். நான் பிறரை யறியேனே.

பணிப்:—அம்ம, இக்காட்சியைப் பாருங்கள்; நம் எஜமானன் எல்லாக்கைகளையுங் கூப்பிக்கொண்டிருக்கும்போது சிறிதலர்ந்த தாமரைமலர்களடர்ந்த கடல் போலிருக்கிறார். பாருங்கள்.

மண்டோ:—மஹாராஜாவின் விருப்பம் தடைபட்டால் இக்கற்புடையவளைக் கோபியாதிருப்பரோ?

கஞ்சுகன்:—(தனக்குள்) நான் பார்க்கட்டும். நாணல் மலர்போல வெளுத்துச் சிறந்த சரீரமுடைய மிதிலைவேந்தன் மகளான இச்சிறுமி, சந்திரக்கலை போல் தோன்றுகின்றாள்; கைகூப்பிக்கொண்டிருக்கும் இவர் முகிழ்த்ததாமரை மொய்த்ததொரு வோடையின் பொலிகின்றாரே.

ராவண:—தேவி, சமாதானத்திற்கு முழுப்பொருளான வணக்கத்தை இதோ செலுத்துகிறேன் (வணங்குகிறான்)

சீதை:—ஐயோ! (காலை வெகுதூரம் மடக்குகிறாள்)

மண்டோ:—இவள் தைரியசாலியே! மஹாராஜாவின் தலையைச் சேற்றைப்போல காலால் உதைக்கிறாள். சீதை பூமகளென்றும் ராமன் திருமாலென்றுங் கூறுகின்ற உலகப்பேச்சு உண்மையே!

கஞ்சுகன்:—ராஜகுமாரி, மஹாராஜாவினுடைய வணக்கத்தை ஏன் அவமதிக்கிறாய். சுந்தரீ, உலகங்கள் நலங்களை யடையும்பொருட்டு அந்தணர்கள் யாகஞ்செய்து வணங்கும் எமன், குபேரன், இந்திரன் முதலிய தேவர்களும் தத்தம் மானத்தைவிட்டுத் திறை கொடுக்கப்பெறும் அவ்விராவணனன்றோ பன்முறை உன்முன் தலைவணங்குகின்றான்!

சீதை:—இல்லை, வணக்கமன்று; இது நாசமேயாம்.

கஞ்சுகன்:—இவளைக் கெஞ்சக்கூடாது.

ராவண:—உன் திருவடிகளே எனக்குப் புகல்.

சீதை:—சக்கரவர்த்திதிருமகன்தன் திருவடிகளிற் சென்று சரணமடைவாய்.

ராவண:—(கோபித்து விரைந்தெழுந்து) என்ன, என்ன! அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர் என்னும் நான்கு வருணத்தாரிடமிருந்து வாங்கும் ஆறிலொரு கடமையை உண்டு, சந்தி விக்கிரக முதலிய அறுதொழிலையும் புரிகின்ற அரசர்க்கெல்லாம் பொதுமகளன்றோ உன் தாயான பார்மகள்; அவள் மடந்தையாம் உனக்குக் கற்புநிலை என்பதேது! வம்பிது நீ வளர்க்கவேண்டா. (எல்லோரும் பயப்படுகின்றனர்.)

சீதை:—அது எனக்குத் தெரியாது.

ராவண:—என் சந்திரஹாஸ மெங்கே?

சீதை:—இது எனக்கு ஊதியமே யாகும். என் நாதனது திருவடியே எனக்கு அடைக்கலம்.

மண்டோ:—அப்படியே யாகிவிட்டதே! என்னுயிரைக்கொடுத்து மஹாராஜாவை வருங் கேட்டிலிருந்து கப்பாற்றுவேன். (விரைவில் அவ்விருவருக்குமிடையில் வந்து நின்று) மஹாராஜ, வெற்றி சிறக்க.

ராவண:—(பார்த்து) ஏ, நம்மனைவி மயன்மகளிவள் மண்டோதரி யன்றோ? (வெட்கத்தால் தலைதாழ்த்தி நிற்கின்றான்)

மண்டோ:—மஹாராஜா, இக் கத்திக்கு இரையாதற்கொத்தவன் இவள்கணவன் ராமனுமே யல்லன். மற்றுநீர் பற்றிக்கொணர்ந்த இப்பெண்ணொரு பொருளோ! தாங்கள் புறக்கணித்தால் தானாகவே உயிர் விடுவளே.

கஞ்சுகன்:—(தனக்குள்) உலகவரசன் ராமன் மனைவியான இச் சீதை பூமிபோலவும், நம்மரசன் கடல்போலவுமிருக்க, இவ்விருவர்க்குமிடையி லிருக்கும் மயன்மகளான மண்டோதரி பூமியைக் காக்க வந்தகரைபோல காணப்படுகிறாள். எனக்கும் இதுவே சமயம். (வெளிப்படை) ஐய, நாந்தகமிதனைநீ ரெதற்கெதி ரேந்தினீர்? அமுதம்பருகும் தேவர்க்கு வருங்கெடுதியைக்கண்ட திருமால் கனலுமிழும் சக்கிரப்படையை உன்மேலெறியக் கையி லெடுத்தனரோ? மற்று, உன்னைக் குறித்துச் சிவபிரான், தக்ஷகனை நாணாகக்கொண்ட பினாகவில்லை எடுத்தனரோ?

ராவண:—இது நீதியே!

(திரைக்குள்) அரசன் வெற்றி பெறுக; அழகிய முகத்தோனே, வெற்றி பெறுக. இன்னும் பத்து நாழிகையே உளது. நீராடும் வேளை தவறுகின்றது. சங்கமும் முரசங்களும் ஒலிக்கின்றன. மஹாராஜா, இப்படி எழுந்தருள்க.

ராவண:— இப்பொழுது நீங்கள் இடையூறாக நேர்ந்தீர்கள். காலையில் காண்பேன் இவள் செய்தி.

(பரிவாரத்துடன் ராவணன் போகிறான்)

சீதை:—கணவனை அடைவேனென்ற ஆசையோ இனி எனக்கில்லை. இவ்வாறு அரக்கன் கையா லிறப்பது பாவமன்றோ? அதனால் கணவனை நினைத்துக்கொண்டு யானே உயிரை விடுவேன். (எங்கும் பார்த்து) என் நல்வினைப்பயனால் அரக்கியர் தூங்கிவிட்டனர். ஐயோ, அரக்கன்தலை பட்டதால் இக்கால்கள் அசுத்தமாயின. இப் பொய்கையிற் சென்று நீராடித் தூய்மையானபிறகு துன்பத்திலிருந்து விடுவித்துக்கொள்வேன். (போதல்)

அசோகவன அங்கம் முற்றிற்று

தமிழ்ப் பாடம் 119.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[306-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

முன்ன கங்குடை கவித்தகா ளமுகின்
முன்னிருந்த தன்பின் முகங்கொடா
தென்ன கந்தனை யொழித்து நென்னலிடை
யிந்தமா நகரி லெய்தியும்
பொன்ன கங்கொள் புயவிதுர னில்லிடை
புகுந்த தென்கொலிது புகலெனப்
பன்ன கந்தனை யுயர்த்த கோவுமுரை
பகரமா லுமெதிர் பகர்வான். 49.

தன்னுடையமனைக்கு வராது விதுரன் மனைக்கு ஏன்சென்றாய் என்று கண்ணனைத் துரியோதனன் வினவுகின்றான்.

பதவுரை.

முன் - முன்னாளில், நகம் - (கோவர்த்தன) மலையை, குடை-(இந்திரன் பெய்வித்த சோனைமாரியை விலக்கும் பொருட்டு) குடையாக, கவித்த - கவித்த வனாகிய, காளமுகில் - கருமேகம் போன்ற கண்ணன், முன் - எதிரே, இருந்ததன் பின் - அமர்ந்தபிறகு, முகம் கொடாது - முகம் கொடுக்காதவனாய்,

நென்னல் இடை - நேற்றையதினம், இந்த - இந்த, மா - பெரிய, நகரில் - நகரத்திலே, எய்தியும் - வந்து சேர்ந்தும், என் அகம் தனை, - என்னுடைய மனையை, ஒழித்து - தள்ளிவிட்டு, பொன் நகம் கொள் - பொன்மலை போன்ற, புயம் - புஜங்களை உடைய, விதுரன் - விதுரனது, இல் இடை - வீட்டிற்குள், புகுந்தது - நீ புகுந்தது, என்கொல் - என்ன காரணம்? இது - இதனை, புகல் - சொல்லக் கடவாய், என - என்று,

பல் நகந்தனை - பற்களையுடைய பாம்பை, உயர்த்த - கொடியாகத் தூக்கியிருக்கின்ற, கோவும் - அரசனாகிய துரியோதனனும், உரைபகர - சொல்ல, மாலும் - திருமாலாகிய கண்ணனும், எதிர் பகர்வான் - பின்வருமாறு பதில் கூறுவான்.

விரிவுரை:—‘முன் நகம் குடைகவித்த காளமுகில்’ என்று கண்ணனைக் குறிப்பதில் ஓர் உட்கருத்து அடங்கியிருக்கின்றது. மலையும், அதன்மேல் மேகங்கள் குடைபோல் கவிந்திருப்பதும் இயற்கை. இந்த மேகமோ, தான் கீழாகவும் மலையோ மேலாகவும் இருக்கச் செய்தது. இவ்வண்ணம் யாவற்றையும் மேல்கீழாகப் புரட்டவல்ல மா மாயனாகிய இவன் இங்குத் துரியோதனன் அவையில் யாது செய்வானோ என்னும் பொருள்பட அம்மொழிகள் நிற்பதால் அவை கருத்துடை யடைஅணி. அவ்வாறே ‘பொன் நகம்கொள் புய விதுரன்’ எனப் பேசியபோதும் மலை போன்ற திரண்டதோளை உடையவனாய் இருத்தல் பற்றிப் போரிலே அவனைப் பாண்டவர்கள்பக்கம் உதவியாக்கிக்கொள்ளும்பொருட்டு அவனோடு நீ உறவு கொள்ளச் சென்றனையோ என்னும் எண்ணம் துரியோதனனது மனத்தில் இருந்திருக்கலாம்.

என்னி னின்னி லொருபேத மில்லையிது
வென்னி னின்னிலது வென்னினு
மின்னின் முன்னிலகு விறனெ டும்படை
விதுரன்வந் தெதிர்வி ளம்பினு
னுன்னி லின்னமுள தொன்று பஞ்சவ
ருரைக்க வந்ததொரு தூதன்யா
னின்னி லின்னடிசி லுண்டு நின்னுடன்
வெறுக்க வெண்ணுவது நீதியோ 50.

விதுரன்மனைக்குச் சென்றதற்குக் கண்ணன் காரணம் கூறுகின்றான்.

பதவுரை.

என் இல் - எனது வீடு என்றும், நின் இல் - உனது வீடு என்றும், ஒரு பேதம் - வித்தியாசம் ஒன்றும், இல்லை - பாராட்டவில்லை.

இது என் இல்-இது என்னுடையவீடு, நின் இல் அது - அது உன்னுடையவீடு, எனினும் - என்று நீ பிரித்தே பேசுவாய் ஆனாலும், மின்னில் - மின்னலைப் போல, முன் - முன்னே, இலகு - பிரகாசிக்கின்ற, விறல்-பராக்கிரமம் பொருந்திய, நெடும்படை - பெரிய ஆயுதங்களைஉடைய, விதுரன்-விதுரனானவன், வந்து-வந்து, எதிர்விளம்பினான் - எதிர்கொண்டு அழைத்தான்.

உன்னில் - யோசிக்குங்கால், இன்னம் ஒன்று உளது - இன்னொரு காரணமும் இருக்கின்றது; பஞ்சவர் - பஞ்ச பாண்டவர்கள், உரைக்க - சொல்லவே, வந்த-அவர்கள் சொல்லியபடி வந்த, ஒரு தூதன்யான்- ஒரு தூதன் நான் ஆவேன்.

(ஆகவே) நின் இல் - உனதுவீட்டில், இன் அடிசில், இனிய உணவை, உண்டு - சாப்பிட்டுவிட்டுப் பின், நின் உடன் - உன்னோடு, வெறுக்க - வெறுத்துக் கொள்ள, எண்ணுவது - நினைப்பது, நீதியோ - நீதியாமோ, (என்று கண்ணன் மொழிந்தான்)

விரிவுரை:—கண்ணன், தான் துரியோதனன் வீட்டிற்குச் செல்லாது விதுரன்மனையைத் தனது இருப்பிடமாகக் கொண்டதற்கு மூன்று காரணங்கள் கூறுகின்றான்.

‘துரியோதனா நான், உன்வீடு விதுரன் வீடென்று பிரித்துப் பாராட்டவில்லை. நீ பிரித்தேபாராட்டுவாயாயின், நீ வந்து உன்மனை ஏகுமாறு என்னை அழைத்தாயோ? இல்லை. விதுரன் வந்து எதிர்கொள்ள, நான் அவன்மனை சென்றேன். இவ்விரண்டும் தக்க காரணங்களாயினும், அவன் எதிர் கொண்டான் என்று சந்தோஷமும், நீ எதிர்கொள்ளவில்லை என்று கோபமும் நான் கொள்பவனல்லன். நான் பாண்டவர் தூதனாக வந்தவன். நான் வந்த காரியம் முடியாதுபோகுமாயின் பாண்டவர்தம் தூதன் என்ற முறையில் உன்மீது வெறுப்புக்கொள்ள நேரலாம். எனவே, உன்மனையில் உண்டு பின் உன்னை வெறுத்துப் பேசுதல் நீதியாகாதாகையால், நான் விதுரன் மனை தங்கினேன்’’ என்று கண்ணபிரான் இச்செய்யுளால் துரியோதனனுக்கு உணர்த்துகின்றான்.

குறிப்பு:—விதுரன்மனை சென்றதற்குக் காரணம் இது வென்று கூறிய கண்ணனைப்பார்த்துத் துரியோதனன், ‘நீ இங்கு வந்த வினை யாது’ என்று கேட்கவும், முன் இசைவின்படி, பாண்டவர்க்குரிய பாகத்தைக் கேட்கத் தான் வந்துளதாகவும், அதை அவர்க்கு வழங்குவதே புகழுடைய கருமமென்றும், கௌரவர் மறுப்பாரேல் அது, ஆண்மையும் அறமும் புகழுமுடைய தாகாதென்றும் கண்ணன் எதிர்விளம்பும் செய்யுள்கள் ஐந்து இதற்குப்பின் விடலாயின.

நீவெ றுக்கிலெ னிருந்த மன்னவர்
திகைக்கி லென்பல நினைக்கிலென்
போய்ந கைக்கிலெ னுரைத்த வுண்மைமொழி
பொய்த்ததென் றமரர் புகலிலென்
வேய்ம லர்த்தொடை யலைவ ரென்னுடன்
மிகைத்து வெஞ்சமர் விளைக்கிலெ
னீயி ருக்குமிட மெனினுமிப் புவியில்
யானவர்க் கரசினிக் கொடேன் 51.

அரசொன்றும் கொடுக்கமுடியாதென்று துரியோதனன் மறுக்கின்றான்.

பதவுரை

நீ வெறுக்கில் என்-நீவெறுத்தால் என்ன; இருந்த மன்னவர் - இச் சபையில் இருக்கும் மன்னவர்கள்,

திகைக்கில்என் - திகைப்புற்ருல் என்ன; பலநினைக்கில் என் - (என்னைப்பற்றிப்) பலவாறு நினைத்தால் என்ன; போய்-வெளியே போய், நகைக்கில்என் - நகைத்தால் என்ன; உரைத்த-நான் முன் கூறிய, உண்மைமொழி - மொழியின் உண்மை, பொய்த்தது - பொய்யாய்ப் போயிற்று, என்று-என்று, 'அமரர்-தேவர்கள்,புகலில் என் -சொன்னுல் என்ன; வேய் - தொடுத்த, மலர்த் தொடையல் - மலர்மாலை தரித்துள்ள, ஐவர் - பஞ்ச பாண்டவர், என்னுடன் - என்னேடு, மிகைத்து - பொங்கி எழுந்து, வெம் - கொடிய, சமர் - போரை, விளைக்கில் என்- விளைத்தால் என்ன. (எவர் என்ன வாகிலும் சொல்லிக்கொள்ளட்டும், செய்துகொள்ளட்டும்) இனி-இனிமேல், யான் - நான், இப்புவியில்- இப்பூமியில், ஈ-ஈயானது, இருக்கும் இடம் எனினும்- இருப்பதற்குள்ள அவ்வளவு சிறிய இடம் என்ருலும், அவர்க்கு - பாண்டவர்களுக்கு, அரசு - ராஜ்யம், கொடேன் - கொடுக்கமாட்டேன் (என்று துரியோதனன் மொழிந்தான்.

விரிவுரை:— மானம்காவாமை, பழி அஞ்சாமை, தீவினையச்சம் கொள்ளாமை முதலிய கயமைக் குணங்களைத் துரியோதனனிடத்தில் இங்குக் கவி காட்டுகின்ருர்.

இலக்கணம்.

D நான்காம் வேற்றுமை.

நான்காம்வேற்றுமை உருபு பொருள் முதலியனவற்றை முன் (1வது வால்யூம், 948-வது பக்கத்தில் விளக்கியிருக்கின்ரும்). இவ்வேற்றுமைக்குரிய 'கு' வென்னும் உருபேனும் அல்லது, பொருட்டு ஆக என்னும் சொல்லுருபேனும் பெரும்பாலும் விரிந்தே வருவது தமிழ் வழக்கு. ஆயினும், 'சீதை கேள்வன்' என்பது போல் முறைப்பொருளிலும், 'கூலிவேலை' என்பதுபோல் பொருட்டுப்பொருளிலும்,'கடிப்பகை' என்பதுபோல், பகைப்பொருளிலும் 'விளக்கெண்ணெய்' என்பதுபோல் நேர்ச்சிப் பொருளிலும், நான்காம் வேற்றுமை உருபு சிற்சிலபோது தொக்கு நிற்றலும் உண்டு. நான்காம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள் நேர்வது மிக அருமை.

I நிலைமொழி, கு, பொருட்டு, ஆக, என்னும் நான்காம்வேற்றுமை உருபுபெற்ற சொல்லாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும்.

ஏழைக்கு + பொருள் கொடுத்தான் = ஏழைக்குப் பொருள் கொடுத்தான்.

நகைக்கு + தங்கம் வேண்டும் = நகைக்குத் தங்கம் வேண்டும்.

பொன்னின்பொருட்டு + பொய் சொன்னுன் = பொன்னின்பொருட்டுப் பொய்சொன்னுன்.

பெருமைக்காக + சிரித்தான் = பெருமைக்காகச் சிரித்தான்.

II (1) நான்காம்வேற்றுமைத் தொகையில் (நிலைமொழி உயர்திணையா யில்லாமலிருந்தால்) வருமொழி முதல் வல்லினமெய் மிகுந்து புணரும்.

கடி + பகை = கடிப்பகை (கடிக்குப்பகை = வெண்சிறுகடுகு)

பாம்பு + பகை கருடன் = பாம்புப் பகை கருடன். (பாம்புக்குப் பகை)

(2) நிலைமொழி உயர்திணையா யிருக்குமாயின் நான்காம்வேற்றுமைத் தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

சீதை + கேள்வன் = சீதை கேள்வன்

மந்திரி + புதல்வன் = மந்திரி புதல்வன்

III (1) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைகள் என்று கருதும்படி நிற்கின்ற தொடர்களிலும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணரும்

கூலி + குற்றேவல் = கூலிக்குற்றேவல்.(கூலிக்குச் செய்யுங் குற்றேவல்)

மயிர் + சாந்து = மயிர்ச்சாந்து (மயிரிற்குப் பூசும் சாந்து)

(2) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் நிலைமொழி உயர்திணையா யிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

பெரியோர் + குணம் = பெரியோர்குணம் (பெரியோர்க்குத் தகுதியான குணம்.)

காளி + பூசை = காளி பூசை (காளிக்குச் செய்யும் பூசை)

(3) நான்காம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்கதொகையிலும் நிலைமொழி வடசொல்லாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

சுவான + பலி = சுவானபலி (சுவானத்திற்குப் போடும்பலி)

காக + பலி = காகபலி(காகத்திற்குப் போடும் பலி)

தேவ + பூசை = தேவபூசை(நிலைமொழி வடமொழியொடு உயர்திணையாகவும் இருக்கின்றது)

குறிப்பு:—நாய்ப்பலி, என்னுமிடத்து நிலைமொழி தமிழ்ச்சொல் லாதலால் வல்லெழுத்து மிகுந்து புணர்ந்தது. இதே பொருளுடைய 'சுவானபலி' என்னுந் தொடரில், சுவானம் என்பது வடமொழி யாதலால் வலி மிகவில்லை.

ஆகையால், நான்காம் வேற்றுமை விரியிலும், நிலைமொழி உயர்திணையாகவேனும் வடமொழியாகவேனும் இல்லாத நான்காம் வேற்றுமையில் தொகைநிலைத்தொடர்களிலும், வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்தே புணரும் என்று கொள்ளலாம்.

அகராதிகள்.

	ரூ.	அ
தமிழ்ச்சொல் லகராதி (உதாரணங்களுடன்) மூன்று பாகம் ...	18	8
தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary	10	0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள் எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது. விலை ரூபா 6 0 0.

வி. பி. செலவு வேறு.

விலாசம்:—"கலா நிலயம்" 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

2 8 MAY 193

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—1. மந்திரப்படலம்.

[317வது பக்கத் தொடர்ச்சி]

மைந்தன் புகழுந் தந்தைக் குரியது.

யாதுநுங் கருத்து இயம்புவீரெனத் தயரதன் வினவி
ஒய்தலுமவ் வவைக்க ணமர்ந்த அமைச்சரும்
மற்றுள அரசரும் விடைபகர்ந்திலராய்,
திரண்ட தோளின னிப்படிச் செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனு விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்

[திரண்ட தோள்களுடைய தயரதன் இப்படிச் சொல்லவும் அங்கிருந்தோர், மனத்தில் புரண்டெழுந்து பொங்கிய சந்தோஷமுடையவர்களாயினும், உடனே, மன்னவனைப் பிரியவேண்டுமே யென்ற துன்பத்திஞல் பயர்து இரண்டு கன்றுகளுக்கு இரங்கும் ஒரு பசுவைப்போல் இருந்தனர்]

ஆய அவர் நிலையி னருமையைக் காட்டிப் பிறகு,

அன்ன ராயினு மரசனுக் கதுவல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பில்
மன்னு மன்னுயிர்க் கிராமனின் மன்னவ ரில்லை
என்ன வுன்னியும் விதியது வலியினு மிசைந்தார்

[அவ்விதம் இருந்தாராஞலும், இவ்வாறு செய்வதன்றித் தயரதனுக்கு நன்மை வேறு இல்லை எனக் கருதியும், இப்பெரிய பூமியில் நிலைபெற்ற உயிர்களுக்கு இராமனையல்லாமல் வேறு மன்னவர் இல்லை என்று எண்ணியும், விதியின் பலத்திஞலும், இணங்கிஞர்]

என வற்புறுத்துவார் கம்பர். இசைந்தாரேனும்; "மன்ன, இராமனே எமக்கரசனுகுக" என இயம்புஞ் சொற்களில், "நீயோ துறந்தகல்க" என்னும் பொருளும் இன்றியமையாது பொருந்தியுளதாகையால் ஒன்றும் விளம்புதற்கு வாய்கொள்ளாராய் அவர் வாளாவிருக்க,

இருந்த மந்திரக் கிழவர தெண்ணமுந் தன்பால்
பரிந்த சிந்தையம் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க்குறுதியும் பொதுவுறநோக்கித்
தெரிந்து நான்மறைத் திசைமுகன் திருமகன் செப்பும்

[அவ்வாறிருந்த மந்திரிகளது எண்ணமும், தன்னுடைய நன்மையை விரும்பிய மனத்தையுடைய தயரதன் கருதிய பயனையும், இராமனுல்உயிர்களுக்குப் பொருந்தவேண்டிய நன்மையையும், நடுநிலையில் பார்த்து அறிந்து, நான்கு வேதங்களையுடைய பிரமனது திருமகனை வசிட்டன் பின் வருமாறு செப்புவான்].

வசிட்டன் பகர்வதைக் கேட்குமுன், வான்மீகி முனிவர் இவ்வரியநிலையை எவ்வண்ணங் கையாள்கின்றன ரென்பதைக் காணல் வேண்டும். கோமகன் முடிசூடிஞல் மன்னனைத் தாம் துறக்கவேண்டுமே என்ற எண்ணமே எழுந்ததில்லையோ, அல்லது இவன் துறப்பினுந் தமக்கதஞல் யாதுங் குறையில்லை யென்ற கொள்கையரோ, வடநூலில் விவகரித்த அவையினேர் யாதும் தயங்கலின்றி,

"அரசரே அநேகமாயிர வருஷங்கள் இராச்சிய பரிபாலனம் பண்ணித் தாங்கள் முதிர்ந்த வயதை அடைந்திருக்கின்றீர், என்பது நிச்சயம். ஆகையால் தாங்கள் இந்த க்ஷணமே இராமரை இளவரசராகப்பண்ணி அவருக்குப் பட்டாபிஷேகம் செய்துவைக்க வேண்டும். ஆஜாநுபாகுவாயும் மிகுந்த பலசாலியாயு மிருக்கும் இரகுவீரரான இராமர், யானையின்மீதேறிக் குடைநிழலின்கீழ் உட்கார்ந்துகொண்டு நமது நகரமார்க்கத்திற் போவதைப் பார்க்க நாங்கள் வெகு ஆவல் கொண்டிருக்கின்ருேம்"

என்று விளம்பிவிட்டனர். இவ்வண்ணம் இவர் பழையனகழித்துப் புதியனபுகுத்தும் ஆர்வத்தைத் தன்வயின் செலுத்திய விரைவினைநோக்கிய தயரதன் மனம் துண்ணெனத் திகைத்ததில்லையெனின் அவன் மாநுடனல்லன். ஆயினும் அதனைப் புறத்தே தோற்றுவிக்காது அகத்துளே அடக்கிவிட மனிதனுல் இயலும் தயரதனே அது செய்ய முயலாமல்,

"நான் சொல்லி வாய்மூடுமுன் நீங்கள் எல்லாரும் இராமன் இந்த க்ஷணமே அரசனுக வேண்டுமென்று ஆசைப்படுகின்றீர். இதுதான் எனக்கு வெகு சந்தேகமாகத் தோன்றுகின்றது. நீங்கள் நன்ருக ஆலோசித்து உங்களுடைய கருத்தை வெளியிட்டதாக எனக்குப் புலப்படவில்லை. உண்மையை வெளியிடுங்கள். தருமந் தவருது நான் இராச்சியபரிபாலனம் பண்ணிக் கொண்டிருக்கையில் எனது பிள்ளையான இராமனை இளவரசனுக்க ஏன் இவ்வளவு விருப்பமுள்ளவரா யிருக்கின்றீர்"

என வாய்திறந்து வினவலாயினன். இதற்குப் பதில் பகரும்முகத்தால் அவர் இராமனது குணங்களைப் பின்னுங் கொண்டாடுவாராதலால் அப் புகழினை மேன்மேலுந் தன் இரு செவிகளாலும் பருகிக் களிக்கின்றபயனைத் தயரதன் எய்தஉன்னினனென்று வான்மீகிமுனிவர் குறிப்பது ஒருபுறமிருக்க, மன்னவன் பெருமைக்கு இத்தகைய மாற்றம் பொருந்துமோ என்னுமோர் ஐயம் எஞ்சாது தீர்வது எங்ஙனமியலும்.

இதற்கு உத்தரமாய் நிகழ்ந்த மொழிகள் ஆராயத்தக்கன கம்பர்நூலில் தயரதன் தான், இராமனுக்கரசளித்தபின் மா தவங்கள் செய்ய அடவி ஏகுகின்ற கருத்துடையனுதலை வான்மீகத்தில் இயம்பாது, 'சௌக்கியமாய்ச் சிலகாலம் கவலையற்று இருக்க வேண்டு''மென்பதே தன் கருத்தென்று குறித்தானுஞுயி, எண்ணில் பன்னெடுமாண்டுகள் தமக்குத் தலைவனுயிருந்தவொரு பெருவேந்தன் அரசின் நீங்கநின்றக்கால், அவனது அருமைபெருமைகளை இரண்டொரு சொற்களினுலேனும் முதலிற் பாராட்டிப் பிறகு வருதற்கிருந்த மைந்தனது புகழைப் பாடியிருப்பரேல் அது நாவின் நயங்கருதிய செம்மையுடையதா யமையும். அவ்வாறின்றியிவ் வமைச்சர் முதலினேர் நயமொழி நவில்தற்கு நினைத்திலர். இராமனது உயர் குணங்களையே உரைக்கத் தொடங்கிஞர். பலபட அவர் பேசிய புகழினை, "அறிவும் ஆற்றலும் அருளும் அன்பும் உடையவன் இராமன், அழுக்காறு அவா வெகுளி இன்ஞச்சொல் இல்லாதவன், நடுநிலை தவரு மதியினன். சீலன் மெய்யன் நீதியன், அறத்தின்புறஞ்செலாத் திறத்தினன். கல்வியன் ஈகையன், இசைக்கலை வல்லவன். பரதனுக்குத் தமையன் எனத் தக்கவன்," என்ற சொற்களில் அடக்

கலாம். "இத்தகைய மேன்மையோன் இராமன் ஆதலால் எல்லாரும் அவனையே உகக்கின்றனர். தங்களுடைய குமாரரை வெகு சந்தோஷமாக எங்களுடைய நன்மையின் பொருட்டு இந்த க்ஷணமே பட்டாபிஷேகஞ் செய்துவையுங்கள்" என மன்றாடினர்.

இக்கட்டுடைய வோர் நிலையிது. இராமனுந் தங்களுக்கு அரசனாக விழைகின்றார், அவ்வாறு விழைவதைக் கூறுவதால் தயரதன்பால் குறைவொன்றடுத்ததாய்க் குறிக்கவும் படாது. இவ்விரண்டும் ஒரு சிறிதேனும் இணங்கிநடக்கவேண்டுமென்று வான்மீகி முனிவர் முயன்றாரென் றெண்ணவோ இயலாவகை, தங்களுடைய நன்மையின் பொருட்டே இராமனை அரசனாக்கும்படி அவர் வேண்டி வைத்துவிட்டார். "தயரதா, நீ ஆள்வதைவிட இராமன் ஆள்வதே எங்களுக்கு நன்மையைத் தரும்" என்று அவன் முகத்தெதிர் அறைந்ததாகும் இவ்வாசகம். நுண்ணுணிச் சொல்லும் பொருளும் தோன்றாவகையில் கம்பர் நிகழ்த்த முயல்கின்றார். ஆதலின், குலகுருவாகிய வசிட்டன் வாயில் எச்சொல்லும் செவ்விதாயமையும் என்ற சிந்தையால், மற்றவர்களுக்குமுன் அம்முனிவனையே மொழியவைக்கின்றார். வசிட்டனுந் தன்னரும் பொறுப்பைத் திறம்பட ஆற்றுவானாய்,

> நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
> பெருமை யெய்தினர் யாவரோ யிராமனைப் பெற்றார்
> கரும மேயிது கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ
> தரும மும்மிது தக்கதே நினைத்தனை தகவோய்

[அரசே, சக்கரம் நடத்திப் பெருமையடைந்த அரசர் நின்குலத்தில் முன் அனேகர் இருந்தாராலும், இராமனைப்பெற்றவர் என்ற புகழிற்கும் பாக்கியத்திற்கும் உரியராயிருந்தவர் நீ யல்லாது வேறுயாவர். எல்லாம்கற்றுணர்ந்த உனக்கு இது தகுதியான கருமமே யாகும். இனி நீ செய்யத்தகுந்த தருமம் இது. பெருமையுடையவனே, உன்னுடைய மேன்மைக்குத் தகுந்தபடியே நினைத்தாய்]

என்று தரம்பிரி தில்லா முகமனோடு மொழியத் துவக்கினன். இராமனது பெருமையும் தயரதனது சிறப்பும் ஒன்றாய் இணைக்கப்பெற்றுள்ள இந்நயம் எவர்க்கும் வாய்க்குமோ. தக்கதே நினைத்தாயென்று தயரதனது மதியையே பாராட்டினன் வசிட்டன். தயரதன் செய்வதற்குரியகருமமாயது கொண்டாடப்பட்டதன்றித் தயரதன்போய் இராமன் அரசெய்துவதால் உலகினது நன்மை அதிகப்படும் என்று இயம்பவில்லை. "நீ யினித் தவத்தை மேற்கொள்வதே தக்கது, அவ்வாறு நீ அகன்றபின் இவ்வுலகம் என்னாகுமோ என்ற கவற்சியாலும் நீ அலைப்புண்ண வேண்டா" என்று தேற்றும்பொருட்டு வசிட்டன்,

> புண்ணி யந்தொடர் வேள்விகள் யாவும் புரிந்த
> அண்ண லேயினி யருந்தவ மியற்றவு மடுக்கும்
> வண்ண மேகலை நிலமகள் மற்றுனைப் பிரிந்து
> கண்ணி ழந்தில ளெனச்செயு நீதந்த கழலோன்

[புண்ணியத்திற் கிடமான யாகங்களெல்லாம் செய்துமுடித்த அரசே, இனி நீ அரிய தவத்தைச் செய்யவுந் தகும். தவத்தைப் பூண்டு நீ அகன்றதனால், அழகிய கடலை மேகலையாகக் கொண்டுள்ள நிலமகள் கண்ணிழந்தவள்போல் ஆயினள் என்று முடியாமல் நீ பெற்றெடுத்த இராமன் அவளைக் காப்பான்]

என்று சாற்றுகின்றான். "உன்னால் இவ்வுலகம் எவ்வளவு மேன்மையாகக் காக்கப்பட்டதோ அவ்வளவு மேன்மையாக இராமனாலும் காக்கப்பெறும் என்பதிலையமில்லை—ஆதலால் கவலையின்றி உனது நன்மையின்பொருட்டு நீ தவவனம் ஏகலாம்" என்பது இதன் கருத்து. "உன்னிலும் சிறப்பாக இராமன் பூமியைத் தாங்குவான்" என்ற பொருள் இதனில் இல்லாமையும், "இவ்வாறு, உனக்கீடாக உலகை அவ்விராமன் அளிக்க இயல்வதும் உன்வயின் பிறந்த பெருமையா லன்றோ" என்ற புகழ்ச்சியே இருத்தலும், தயரதன்பால் பரிவுடைய யாவர் இதயத்தையும் மகிழ்விக்கும். பின், தேவர் மூவருந் திருத்திய திருத்தம் திறலோனென்றும், மன்னுயிர்க்கெலாம் நல்லன் என்றும், வேதியர் முதலோர் யாவரும் தாம்செய்த நல்லறப்பயனெனக் கருதப் பெற்றவனென்றும், எனின், கற்றவருங் கற்றிலாதவரும் அவனை உண்ணு நீரினும் உயிரினும் உகப்பாரென்றும், தயரதனுக்குப்பின் அரசிற்கு வரவிருக்கும்மைந்தனது மேன்மையை எடுத்துக்காட்டி, "மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை யெனைமாட்சித்தாயினும் இல்" என்ற வுண்மைக்கிணங்க,

> மண்ணினு நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
> பெண்ணினு நல்லள் பெரும்புகழ்ச் சனகியோநல்லள்

என, பூதேவி ஸ்ரீதேவி சரஸ்வதி பார்வதி யாவரையும்விடப் பெரும்புகழ்ச் சீதை நல்லளாயிருப்பதையும் ஓதி, "ஆதலின் மனைவியால் மனந்திரிந்து இராமன் நல்லரசு செய்தலின்றி இளைப்பானோவென நீ அஞ்சவும் வேண்டா" என்றுந் தெருட்டி,

> அனைய தாதலி னரசநிற் குறுபொருள் அறியில்
> புனித மாதவ மல்லதொன் றில்லென

வசிட்டன் தன் கட்டுரையை இனிதின் முடித்தனன். இவ்வண்ணம் கம்பர், தொல்குலத் தாயருந் தந்தையுந் தவமும் அன்பினால் மேயவான் கடவுளும் பிறவுமாய வசிட்டமாமுனிவனைச் சொல்வித்ததால் தயரதன் மனத்தில் சுருக்கொன்று மேறாமற் காத்தனர். அங்கவ் வான்மீகத்திலும், இராமனைப் புகழ்ந்து அவனுக்கு அரசை நல்கும்படி அவையினர் தயரதற் குரைத்தனர். அன்னதே இங்கு வசிட்டனுங் கூறினன். ஆயினும், மைந்தனைப் புகழ்ந்ததெல்லாம் அங்கு அவன், தந்தையினும் உயர்ந்தவனென்று உணர்த்த நிற்பனபோன் றிருக்கின்றன. தங்களுடைய நன்மைக்கே நம்பிக்கு நளிமுடி சூட்டென்று வாய்திரந்து கழறியும் விட்டனர். வசிட்டன், "இராமனோ உயரிய குணத்தினன், அரசாதற் குரியவன், உலகத்திற்கவன் குடைக்கீழ் ஓர் குறையும் நேர்ந்திடாது" என்று உணர்த்துங்கால், "உன்வயின் பிறந்ததால் அவன் அத்தகைய னாயினன்" என்ற பான்மையில், இராமனைப் புகழுமாற்றால் தயரதனுக்கும் பெரும்புகழ் வழங்கினன். "இராமனும் நல்லன், சீதையும் நல்லள், நீ இந் நானிலத்தைத் தாங்கிய தகைமைக்கு இழுக்கின்றி அவர்களுந் தாங்குவார். ஆதலின் சங்கையின்றி அவன் கையில் இவ்வரசை ஒப்புவிக்கலாம்," என்பதை எடுத்துக்காட்டி, "நீயோ இனி அருந்தவம் முயலவேண்டியவனாயிருக்கின்றாய். அஃது நீசெய்க. "உன்னுடைய நன்மையின் பொருட்டு அரசைநீ இராமற்கு நல்க நாங்கள் உடன்படுகின்றோம்" என்று வசிட்டனை உரைக்கவைத்த தகைமையாற் கம்பர், வான்மீகர் வசனத்திலுள்ள கூரிய முனைகளை அராவி நீக்கினர். இஃதனைய செவ்வியில், யார்க்கும் இழுக்கின்றி இயம்புதல் எளியதன்று. செயற்கரிய செய்கையாற் கம்பர் பெரியவராகின்றார். கதையினைக் கட்டித் தந்தவர் முனிபுங்கவர் வான்மீகியே யாக, அதனைக் கையாள்பவரும் கவிக்கரசு கம்பருமாக, இவ்விருவர் மொழிகளையும் கேட்டு மகிழ்தற்குரிய இரு செவி படைத்த மாந்தர்க்கு நல்விருந்து இதனினும் வேறுதான் இவ்வையகத்தி லுள்ளதோ. வேறெதனைக் கேட்பினும், இந் நூற்களி னினிமையைக் கேளாதார்க்கு அவ் வோசைப்பொறி தமிழிலோ, மற்றுத் தெலுங்கிலேதானோ, "காது" என்னலாம்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்
(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்
(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இக்காவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

திருக்குறள்
(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த
ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

18910

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.
(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி
மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK

BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

KALANILAYAM. REG. NO. M. 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா	ரூபா	2 0 0
வெளிநாடு	,, ,,	2 8 0
தனிப்பிரதி விலை	அணா	0 4 0

விலாசம்:—'பாரதி' காரியாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ரூ. 500

இனாம்! எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,

தபாற்பெட்டி 99. சென்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை. விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ	5.
அயோத்தியா காண்டம்		ரூ	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—"கலா நிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)